மங்கள வைபவங்களுக்கு தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
அதிக்க ஆடைகளில்
சோபிக்க கோபிராஜ்
கோபிராஜ்
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 02 வெள்ளிக்கிழமை (18 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 359

# புலிகள் போரை இடை நிறுத்திய போதிலும் படையினரின் நடவடிக்கைகள் தொடரும்!

## அரசிடமிருந்து உத்தரவு வரவில்லை என்கிறார் பிரிகேடியர் குலதுங்க

கொழும்பு, நவம்பர் 18

விடுதலைப் புலிகள் தரப்பில் போர் இடைநிறுத்தம் தொடர்பாக அறிவிப்பு வெளியாகியுள்ள போதும், அரசு இது குறித்து எது வித செய்தியையும் இதுவரை வெளியிடாததால் —

ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் வழமை போன்று தொடரும். படையினரின் நடவடிக்கையில் மாற்றம் ஏதும் இராது.

இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க கொழும்பில் செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப் பட்ச போர் இடைநிறுத்தம் குறித்து செய்தியாளர்கள் இராணுவப் பேச்சாளரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் போர் இடைநிறுத்தம் குறித்து இராணுவ உளவுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது என்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சை ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

### அனுமதிஅட்டைகள் அனுப்பப்பட்டன

கொழும்பு, நவ. 18

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சை அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகி 14 ஆம் திகதி வரை நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த சனியன்று பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாக பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை —

அனுமதி அட்டைகளும்' காகிதாதிகளும் 'மாஹோ' கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

நாளை பருத்தித்துறைக்கு அவை வந்து சேரும் என்றும் — நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டது'

இதற்கிடையில் —

கடந்த ஒகஸ்டில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (ஓ-ஐ-3)

## வினாத்தாள்கள் கப்பலில்

யாழ்ப்பாணம், நவ. 18

அடுத்தமாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சி.ஈ (சாதாரண)பரீட்சைக்கான வினாத்தாள்களை "பிளாம்பயான்" கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வினாத்தாள்கள் திருகோணமலைக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி எடுத்துச் செல்லவும்—

அங்கிருந்து பிளாம்பயான் கப்பல் மூலமாக மறு நாள் பருத்தித்துறைக்கு எடுத்து வரவும்—ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-3)

## யாழ்ப்பாணத்துக்கு ஐந்து தொலைபேசிகள்

### அவசரத் தகவல்களைப் பரிமாற

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாண மாவட்டத்துக்கும் வெளிமாவட்டங்களுக்கும் இடையில் தொலைத்தொடர்பு வசதி செய்ய கொழும்பில் ஏற்பாடுகள் நடைபெறுவதாக அறியவந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக செய்மதித் தொடர்பு மூலமாக இயங்கும் ஐந்து நேரடித் தொலைபேசிகளை (Hot Lines) விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கு ஒழுங்குகள் நடைபெறுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்துக்கும் வெளிமாவட்டங்களுக்கும் இடையில் அவசரத் தகவல்களை—பரிமாறிக்கொள்ளும் வகையில் அவசர நடவடிக்கையாக இந்த தொலைபேசி இணைப்பை ஏற்படுத்த தொலைத்தொடர்பு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

(6ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் பஸ் மீது இரவில் ஹெலி தாக்கு

### சாரதி காயமடைந்தார்

சாவகச்சேரி, நவ. 18

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு முன்னால் பயணிகள் பஸ் மீது நேற்று வியாழன் அதிகாலை 1-30 மணியளவில் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

கிளாலியில் இருந்து வந்த இந்த பஸ் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு முன்பாக பயணிகளை இறக்க நிறுத்தப்பட்ட போதே ஹெலி திடீரென வேட்டுக்களைத் தீர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பஸ்ஸின் சாரதியான கருணானந்தம் ரங்கநாதன் (33 வயது) முதுகில் காயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஹெலி தாக்குதல் நடத்திய போது பயணிகள் பஸ்ஸை விட்டு இறங்கி ஓடி பாதுகாப்புத் தேடிக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சம்பவத்தில் பயணிகள் மூவரும் சிறுகாயங்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-31-13-15)

## பிரட்மனின் புதல்வரை நாடு திரும்ப உத்தரவு

கொழும்பு, நவ. 18

வெளிநாட்டு ராஜதந்திர சேவையைச் சேர்ந்த அஸலா வீரக்கோனை அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு நாடு திரும்பும்படி அரசு பணித்துள்ளது

முன்னாள் ஜனாதிபதிகளான பிரேமதாஸ, விஜேதுங்கா ஆகியோருக்கு வெளியுறவு ஆலோசகராகப் பணிபுரிந்த பிரட்மன் வீரக்கோனின் புதல்வரான இவர் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்னாவின் மகளைச் திருமணம் செய்திருக்கிறார்.

பாரிஸ் மற்றும் லண்டன் ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் அஸலா வீரக்கோன் ஆறு ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## யாழ்ப்பாண மக்கள் பாப்பரசரை தரிசிக்க வரப் பாதை திறக்கப்படும்

### ஆயர் மல்கம் ரஞ்சித் நம்பிக்கை

கொழும்பு, நவ. 18

பாப்பரசரைத் தரிசிக்க யாழ்ப்பாணத்தில் இருந்து யாத்திரிகர்கள் கொழும்பு வருவதற்காக பாதை ஒன்று விரைவில் திறக்கப்படும்.

இவ்வாறு தாம் நம்புவதாக பாப்பரசரின் இலங்கை விஜயத்துக்குப் பொறுப்பான குழுவின் தலைவரான ஆயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் யாத்திரிகர்கள் வரை கொழும்பு வருவர் என்றும் —

அவர்கள் கொழும்பில் தங்குவதற்கு பாடசாலைகளிலும் வேறு கட்டடங்களிலும் வசதிகளைச் செய்து கொடுப்பது குறித்து கல்வித் திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-எ)

## விமானநிலையம் சென்று சந்திரிகா வரவேற்பார்

கொழும்பு, நவ. 18

ஜனவரி 20 ஆம் திகதி மாலை 5 மணியளவில் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் பரிசுத்தபாப்பரசரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வரவேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர், பாப்பரசர் கொழும்பு ஆர்ச் பிஷப்புடன் சென் லூசியா கதீட்ரலுக்குச் செல்வார்.

அங்கு நாட்டின் சமயத் தலைவர்களை சந்தித்து உரையாடிய பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை மரியாதை நிமித்தம் சந்திப்பார்.

ஜனவரி 21 ஆம் திகதி காலை 9. 45 மணிக்கும் 12. 45 மணிக்கும் இடையில் வண பிதா ஜோசப் வாஸ் அடிகளாருக்கு ஆசீர்வாதமளிக்கும் நிகழ்ச்சியை பாப்பரசர் நடத்துவார்.

காலி முகத்திடலில் இவ்வைபவம் நடத்தப்படும். இரண்டரை லட்சம் மக்கள் கலந்து கொள்ளக்கூடிய விதத்தில் திடலை நகர அபிவிருத்தி அதிகார சபை திருத்தி அமைத்து வருகிறது.

ஜனவரி 21 ஆம் திகதி 3. 15 மணியளவில் பாப்பரசர் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் இருந்து புறப்படுவார். பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பாப்பரசரை வழியனுப்பிவைப்பார்' (இ-எ)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 18

கிளாலி – பூநகரிப் படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும்என்றுவிடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## மருத்துவபீடப்பரீட்சையை நடத்த தென்னிலங்கை வைத்திய நிபுணர்

### நேற்று யாழ்ப்பாணம வந்துசேர்ந்தார்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் செய்முறைப் பரீட்சைகளை நடத்துவதற்காக வைத்திய நிபுணர் எஸ். குணரத்தின நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கோட்டே ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையில் பணியாற்றும் அவர் இங்கு இருவாரம் தங்கியிருந்து மருத்துவ பீட பரீட்சைகளை நடத்துவார்.

90ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்தபின்னர் வைத்திய நிபுணர் ஒருவர் பரீட்சைகளை நடத்த இம்முறையே யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவ்வளவு காலமும் இங்கு பரீட்சைகள் நடத்தப் பட்டு விடைத்தாள்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்தே வைத்திய நிபுணர்களால் மதிப்பீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இம்முறை இங்கேயே வைத்து மதிப்பீடு செய்யப் படஉள்ளது. (இ-3)

## காணாமற் போயிருந்த மீனவரில் ஐந்து பேர் குருநகர் வந்துசேர்ந்தனர்

குருநகர், நவ. 18

பூநகரி - கல்முனைக் கடற்பரப்பில் கடந்த 9 ஆம் திகதி காணாமற் போன 12 மீனவர்களில் ஐவர் நேற்று குருநகர் வந்து சேர்ந்தனர்.

கடல் கொந்தளிப்பு மற்றும் காலநிலை. சீரற்றநிலையினால் திசை மாறிச் சென்ற இவர்கள் முதலில் கச்சதீவுக்குச் சென்றதாகவும் —

அங்கு குடிதண்ணீர் இல்லாததால், அங்கிருந்து வன்னிப் பகுதி நாச்சிக்குடாவுக்குச் சென்று, ஏனையோரது உதவியுடன் கிளாலியூடாக நேற்று இங்கு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குருநகர் தொடர் மாடிப் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்றவர்களான அமிர்தம் தனேந்திரன் (வயது 22) மருதலிங்கம் ராமு (வயது 37), குட்டிராஜு (வயது 18) மரியநாயகம் ஜப்பான் (வயது28) அன்ரன் தாஸன் (வயது 14) ஆகியோரே நேற்று இங்கு வந்து சேர்ந்தவர்கள் ஆவர்.

ஏனைய மீனவர்களின் நிலை குறித்து இன்னும் தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஓ-51)

## 3 ஆம் தவணைக்கான பொது அறிவுத் தேர்வு

### நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்படும் 3 ஆம் தவணைக்கான பொது அறிவுத் தேர்வின் முதனிலைப் பிரிவுக்கான (6, 7, 8 ஆம் ஆண்டுகளுக்கான) தேர்வு நாளை சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

6ஆம், 7ஆம் ஆண்டு மாணவர்களுக்கான வினாத்தாள்களை பாடசாலை அதிபர்கள் நாளை காலை 8 மணிக்கு தத்தமது கோட்ட பணிமனைகளில் பெறுமாறும் —

8 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பொது அறிவுத் தேர்வு தற்போது இறுதிநிலைத் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேர்வு நிலையங்களிலேயே நடைபெறும் என்றும் — தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை, நல்லூர், யாழ்ப்பாணம் கோட்ட பாடசாலைகளுக்கான வினாத்தாள்களை முறையே யூனியன் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் இயங்கும் தேர்வு இணைப்பு நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

8 ஆம் ஆண்டு மாணவர்களின் விடைத்தாள்களும், புள்ளித்திட்டங்களும் கோட்ட பணிமனைகளூடாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் என்றும் —

இடைநிலை, உயர்நிலைப் பிரிவுகளுக்கான பொது அறிவுத் தேர்வு எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும் என்றும் — தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## படையினர் வேட்டுக்கு இரு தமிழர் காயம்

### நெடுங்கேணியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 18

பதுங்கியிருந்த இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததில் இருவர் காயமடைந்தனர்.

நெடுங்கேணி, மருதோடைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் மருதோடையைச் சேர்ந்த இராசையா கேதீஸ்வரன் (வயது 22), புளியங்குளத்தைச் சேர்ந்த குமாரசாமி நாகேந்திரம் (வயது 23) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-15)

## முச்சந்தி முரளி



போர் நிறுத்தம் என்டவுடன் இவைக்கு அவசரம் வந்திட்டுது போல...!

## வடக்கிலே புலிகளின் அரசியல் கட்டுக்கோப்பு

### 'இந்தியாருடே' ஆசிரியர் பாராட்டு

லண்டன், நவ. 18

யாழ்ப்பாணத்தில் ஓர் கட்டுக்கோப்பும், அமைதியும், விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதை நேரில் பார்த்தபோது வியப்படைந்தேன்.

'இந்தியா ருடே' தமிழ்ப் பதிப்பு ஆசிரியரான வாஸந்தி ... பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அவரை பி.பி.ஸி. சார்பில் ஆனந்தி நேற்றிரவு பேட்டி கண்டபோதே இவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும கூறியதாவது:-

"இலங்கையில் — யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் கட்டுப்பாடு, அரசியல் அமைப்பு

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டன் உதவும்

கொழும்பு, நவ. 18

இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளின் போதும், மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11 — 05 — 1913

உதிர்வு: 18 — 11 — 1993

### அமரர் சவிரி ஞானப்பிரகாசம்

உலகம் போற்றும் உத்தமனாய், வித்தகனாய் - வாழ்ந்தீர்
இரண்டாம் உலகப் போரில் வீரனாய் - பணியாற்றி நின்றீர்
பண்பிற்கு இலக்கணமாய் பாசத்தின் - உறைவிடமாய் அமைந்தீர்
ஓராண்டு உருண்டாலும் உம் நினைவலைகள் - எம்மை விட்டு நீங்கா.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புங்குடுதீவு - 2 [33807]

## 7-ம் ஆண்டு நினைவுகள்



அன்னையின் மடியில்: 24 — 07 — 1946

நீசர் பிடியில்: 18 — 11 — 1987

### அமரர் கனகையா ஆனந்தராசா

[ஆசிரியர் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், இரண்டாம் வருடமாணவன், யாழ். பல்கலைக்கழகம். (கலைப் பீடம்)]

ராசா உன்நினைவழிக்க
யாராலும் முடியாது
எங்களது குலக் கொழுந்தே
பாசமிகு வாழ்வும்
பல்கலைப் படிப்பும்
பாதியில் முடிக்கப்பட்டாலும்
தேசத்து விடி விளக்கே
தினமுனைப் போற்றுகின்றோம்.

பெற்றோர், உடன்பிறந்தோர், மனைவி,

7ஆம் வட்டாரம், குழுமுனை- மேற்கு, முள்ளியவளை.

க. இரகுநாதன்.
யாழ்./ பல்கலைக்கழகம்

(33797)

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 07 — 1938

மறைவு: 18 — 11 — 1984

அமரர்
### அ. க. சிவசுப்பிரமணியம் (சிவம்)

(உரிமையாளர், அம்புலி போட்டோ, நல்லூர்)

எங்கள் உயிர் அப்பா!

பத்தாண்டு போயும் பத்து நிமிடமானதப்பா
பாசத்தைப் பொழிந்து நேசமுடன் வளர்த்த அப்பா
பரிவான வார்த்தை கூறாது எங்கு சென்றீர்கள் - அப்பா
பாதி வழியினிலே பலியாகி விட்டீர்களே அப்பா
பாதகரின் துப்பாக்கி பாய்ந்ததோ உங்கள்- மீதினிலே
அப்பா என அழைக்க இனியார் உளர்
அனாதையாக்கி விட்டு அம்பாள் பாதம் - புகுந்தீர்களா அப்பா
அரவணைப்பில் வாழ்ந்த நீங்கள் படமாகி - விட்டீர்களே அப்பா
ஆசையாக உங்களைக் காண முடியாது - அனைவரும் தவிக்கின்றோம்.

மனைவி, மாமி, பிள்ளைகள், மருமக்கள்.

''அம்புலி போட்டோ''
410, கோயில் வீதி,
நல்லூர். (33787)

# 3 மிக் - 17ரக ஹெலிகள் கொழும்பு வந்து சேர்ந்தன

## ரஷ்ய தொழில்நுட்பகுழுவும் வருகை

கொழும்பு, நவ. 18

ரஷ்யாவில் இருந்து மூன்று மிக்- 17 ரக போக்குவரத்து ஹெலிக்கொப்டர்கள் கடந்த ஞாயிறு கொழும்பு வந்து சேர்ந்தன.

இம் மூன்று ஹெலிக்கொப்டர்களும் ராட்சத ஏ. என் 124 போக்குவரத்து விமானம் ஒன்றில் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டன.

இலங்கை விமானப் படையைப் பலப்படுத்துவதற்காக இந்த ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்வது என்று முந்திய ஐ.தே.க அரசு தீர்மானித்தது.

இந்த ஹெலிக்கொப்டர்களுடன் ரஷ்ய தொழில்நுட்பவியலாளர்கள் குழு ஒன்று வந்து சேர்ந்தது. ஹெலிக்கொப்டர்களை இலங்கையில் வைத்தே இவர்கள் பொருத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவற்றுடன் இலங்கை விமானப்படையிடம் உள்ள ரஷ்ய மிக்-17 ''ஹெலி'' களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

போர் முனைகளுக்கு படையினரையும் போராயுதங்களையும் ஏற்றி இறக்குவதில் ரஷ்ய ஹெலிகள் பயனுள்ள சேவை புரிவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-எ)

## கொலை விசாரணைக்கு உதவும்

# இந்திய அதிகாரிகள் பற்றி அரசுக்குத் தகவல் இல்லை

கொழும்பு, நவ. 18

காமினி திஸாநாயக்கா படுகொலைச் சம்பவம் பற்றிய விசாரணைகளுக்கு உதவ உள்ள தனது இரு சிரேஷ்ட புலன்விசாரணை அதிகாரிகள் பற்றிய விவரங்களை இந்திய அரசுஇன்னும்எமக்கு அறிவிக்கவில்லை என்று நீதி அரசமைப்பு,விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

முன்னாள் அரசியல் தலைவர்களின் படுகொலைகள் பற்றிய முன்னைய விசாரணைகள் போலன்றி காமினி திஸாநாயக்காமற்றும் ஏனையோரின் கொலைகள் பற்றி பாகுபாடற்ற முறையில் விசாரணை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்படுகொலை பற்றிய விசாரணைக்குஉதவ இரண்டு சிரேஷ்ட புலன் விசாரணை அதிகாரிகளை அனுப்பி வைத்து உதவும்படி விடுத்த வேண்டுகோளுக்கு இந்திய அரசு ஏற்கனவே இணங்கியுள்ளது என்றும்—

எனினும் அவர்கள் பற்றிய விபரம் இன்னும் அறிவிக்கப் படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ-எ)

## உலர்வலய அபிவிருத்தி மன்றக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 18

உலர்வலய அபிவிருத்தி மன்ற யாழ். மாவட்டக் கிளையின் கூட்டம் மன்ற தலைமைக் காரியாலயத்தில் தலைவர் திருமதி ந. ஜெகதீஸன் தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

விவசாயத்திட்டம், இளைஞர் கடனுதவி, சுயமுயற்சிக் கடன், மரம் நடுகை, சுகாதாரம் போன்ற விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்படும். (ஐ)

## ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு ஐந்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இன்றும் நாளை சனிக்கிழமையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கும்,

தெல்லிப்பளை கல்விக் கோட்ட ஆண்டு ஐந்து ஆசிரியர்களை மருதனார்மடத்தில் உள்ள மகாஜனக் கல்லூரியில் நடைபெறும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கும் தவறாது சமுகமளிக்குமாறு கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

## புலமைப்பரிசில் ஹாட்லி மாணவனுக்கு

கொழும்பு, நவ. 18

மக்கள் வங்கி வழங்கும் புலமைப்பரிசில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவர் ஒருவருக்கும் கிடைத்துள்ளது.

1993 டிசெம்பரில் நடைபெற்ற க. பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதி விசேடமாகச் சித்தி எய்திய மாணவர்களுக்கு மக்கள் வங்கி புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது.

இலங்கை முழுவதிலும் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்கள் மூவருக்கும், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் இடங்களைப் பெற்ற 30 மாணவர்களுக்குமாக மொத்தம் 33 மாணவர்கள் இப்புலமைப்பரிசிலுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் ஆங்கில இலக்கியம் உட்பட எட்டுப் பாடங்களிலும் அதி விசேட சித்தி (டி) பெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவன் வெஸ்லி தேவசுதர் தேவராஜாவும் ஒரு புலமைப்பரிசிலுக்குத் தகுதி பெற்றுள்ளார். (க)

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, நவ. 18

ஐ. தே. க ஆட்சிக் காலத்தில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்ட சில நிறுவனங்களை மக்கள் மயப்படுத்திய நடவடிக்கையின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் ஊழல்கள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது பற்றிய யோசனையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது. (ஐ-க)

## இலவச மூக்கு கண்ணாடி

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். லயன்ஸ் கழகத்தினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாசையூர் பகுதியில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

பாசையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலையத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 100 பேருக்கு அன்றைய தினம் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக [illegible] சாரசப் பிரிவுத் தலைவர் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு மாகாணசபை: நிர்வாக அதிகாரிகள் திடீர் மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 18

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் நிர்வாகத்துறை நிர்வாகத்துறை மட்டங்களில் திடீர் மாற்றங்கள் செய்யப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

ஆளுநரின் உதவிச் செயலாளராகக் கடமையாற்றிய திரு. ஆர். புஸ்பரத்தினம் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு உதவிச் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

கல்வியமைச்சு உதவிச்செயலாளராக பணியாற்றும் திரு. எஸ். சடாச்சர சண்முகதாஸ் உள்துறை அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

திட்டமிடல் அமைச்சு உதவிச் செயலாளர் திரு. ரங்கராஜன் கொழும்புக்கும் இடமாற்றம் செய்ய முடிவாகி உள்ளதாகத் தெரிய வந்தது.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் உயர் கல்வியதிகாரி ஒருவரை கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கவும் மாகாணசபை வட்டாரங்களால் ஆராயப்படுதாவும் கூறப்படுகிறது. (அ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

**யாழ். மத்தியகல்லூரி மைதானம்**

★ பி.ப. 2.30மணி: மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் புங்குடுதீவு ம.வி. (19 வயது)

★ பி.ப. 3.30 மணி: சோமஸ்கந்தா எதிர் கனகரத்தினம் ம ம வி.(19வயது)

**யாழ். இந்துவில்**

★ பி.ப. 2.30 மணி: முத்துத்தம்பி வி. எதிர் நாவாந்துறை றோ. க. (15 வயது)

★ 3,30 மணி: நாவற்குழி ம வி. எதிர் யாழ். இந்துக் கல்லூரி (15 வயது) (ஒ-20)

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் மாணவர்களுக்கு இடையிலான பட்மிட்ரன் மாவட்ட இறுதிநிலைப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரி உள்ளரங்கில் நாளை சனிக்கிழமை காலை 8.30மணிக்கு ஆரம்பமாகும். (ஒ-20)

## ஆணையர்கள் ஒன்பது பேர் நியமனமாவர்

கொழும்பு, நவ. 18

அரசியல் படுகொலைகள் மற்றும் காணாமல் போனோர் பற்றி ஆராயும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அடுத்த வாரம் நியமிக்கப்படுவர் என்று அரசு அறிவித்துள்ளது.

நாட்டை மூன்று பிரிவுகளாகப் பிரித்து — ஒவ்வொரு பிரிவுக்கும் மூவர் என்ற ரீதியில் — ஒன்பது ஆணையாளர்களை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## புதுமுறிப்புகுளம் புனரமைப்பு

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின்'வான்'பகுதி அழிவுகளை சீர் செய்யும் நடவடிக்கையில் தேசநிர்மாணிகள் ஈடுபட்டுள்ளனர்.

நீர்ப்பாசன திணைக்களநிதி மூலம் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கை மூலம் இக்குளத்தின் 'வான்'பகுதி அரிப்புக்குள்ளாகாதவாறு வலுவூட்டப்பட்டுள்ளது. (ஐ)

# உச்ச விளைச்சலுக்கு உதவும் பசுந்தாட் பசளை

பசுந்தாட் பசளை என்று கூறும் போது சணல் பூவரசு, காவிளாய், வேம்பு, சீமைக்கிளுவை ஆகியனவும் மற்றும் சில அவரை இனப் பயிர்களும் அடங்கும். இவற்றுள் காவிளாய், பூவரசமிலை, வேப்பிலை மற்றும் சீமைக்கிளுவை இலை, குழைகள் போன்றவற்றை வேறு இடங்களிலிருந்து சேகரித்துக் கொண்டு வந்து பயிர் செய்யுமிடத்தில் புதைத்து பயிர் செய்வதுண்டு.

இவ்வகையான சேதனப் பசளைகள் மண்ணில் காற்றோட்டத்தையும், வேர் ஊட்புகும் தன்மையையும் கூட்டுகின்றன. அத்துடன் கனிப்பொருள்களையும் பயிருக்குத் தொடர்ச்சியாக கிடைக்க வழி செய்கின்றன. மேலும் நுண்ணுயிர்களின் தொழிற்பாட்டையும் அதிகரித்து சேதனப் பசளை பிரிகையடைந்து பயிர்களுக்குத் தேவையான முக்கிய பார்ப் போசனைகளையும் அதிகரிக்கச் செய்வதுடன் மண்ணில் ஈரலிப்பை வைத்திருக்கவும் உதவுகிறது.

மாற்று முறையாக பயிர் செய்யும் இடங்களில் பசுந்தாட் பயிரை (சணல், [illegible] செஸ்பேனியா) பயிரிட்டு [illegible] புதைக்கின்ற [illegible] பருவத்தில் புதைத்து. 2-3 வாரங்கள் கழிந்த பின்னர் பயிரை நாட்டலாம்.

இச்சமயத்தில் காபன், நைதரசன் வீதம் திருப்தியாக இருக்கின்றது. இவ்வகையான தாவர வேர்கள் முடிச்சுக்களில் இரைசோபியம் என்னும் பற்றிரியாவினால் நைதரசன் பதிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து மண்ணின் வளம் அதிகரிக்கின்றது.

திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்தில் வெங்காயப் பயிரில் செய்யப்பட்ட ஆய்வுகள் பசுந்தாட் பசளை இடுவதன் மூலம் பெரு விளைவைப் பெற முடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

ெஹக்ரேயருக்கு 7 தொன் பசுந்தாட் பசளை இடப்பட்ட போது 16 மெற்றித் தொன் விளைவு கிடைத்துள்ளது. எதுவித பசளைகளும் இடப்படாத போது 13 மெற்றித் தொன் விளைவுதான் கிடைத்துள்ளது. சிபார்சுக்கமைய அசேதனப் பசளை (உரம்)இடப்பட்ட சணல் இடப்பட்ட போது ஆகக்கூடிய விளைச்சலான 19.2 மெற்றிக்தொன் விளைவு கிடைத்துள்ளது.

ஆகவே பசுந்தாட் பசளையிட்டு பயனைப் பெறுவோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 1994 - 12 - 16ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. **தற்காலிக உதவி விரிவுரையாளர்:-**
   வியாபார நிருவாகம்
   கிறிஸ்தவ நாகரிகம்
   வர்த்தகம்
   நாடகமும் அரங்குக் கலைகளும்
   பொருளியியல்
   ஆங்கிலம்
   நுண்கலை
   இந்துநாகரிகம்
   மெய்யியல்
   அரசறிவியல்
   சமஸ்கிருதம்
   கணிதமும் புள்ளி விபரவியலும்
   ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம்/ வாய்ப்பாட்டு
   ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம்/ பண்ணிசை
   ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம்/ வாத்தியங்கள் - வீணை/வயலின்/ மிருதங்கம்
   ஆற்றுகைக்கலை - (நடனம்) பரதநாட்டியம்
   ஆற்றுகைக்கலை நடனத்திற்கான வாய்ப்பாட்டு (பரதநாட்டியம்)
   ஆற்றுகைக்கலை - நடனத்திற்கான மிருதங்கம் (பரதநாட்டியம்)
2. **தற்காலிக கட்டுரை ஆசிரியர்:-**
   வரலாறு
   புவியியல்
3. **தற்காலிக போதனாசிரியர்:-**
   ஆங்கிலம் தரம் II
   பரதநாட்டியம்
   மிருதங்கம்
   கர்நாடக சங்கீதம் - (வாய்ப்பாட்டு)
   வீணை
4. **இடைவரவு விரிவுரையாளர்:-**
   வர்த்தகம் - வர்த்தக கைத்தொழில் / சட்டம்/ கணக்காய்வு / வரி விதிப்பு
   வியாபார நிருவாகம்- சட்டச்சூழல் / வங்கியியல்
   மெய்யியல்- பொது, சமூக உளவியல்/மத்திய கால மெய்யியல் ஆகியன கற்பித்தற்கு
   அரசறிவியல் / கணிதமும் புள்ளிவிவரவியலும் பிரான்சிய மொழி நாடகமும் அரங்குக் கலைகளும்- அரங்க வரலாறு/ தயாரிப்பு முறை/ நடிப்புக் கொள்கை/ இந்திய அரங்கு ஆகியன கற்பித்தற்கு
   கட்டடக்கலை/சிற்புக் கலை/ஓவியம் தீட்டுதல்
   கிறிஸ்தவ நாகரிகம்- பழைய ஏற்பாட்டியல்/புதிய ஏற்பாட்டியல்/ இலங்கை திருச்சபை வரலாறு/ கிறிஸ்தவ மெய்யியல்/கிறிஸ்தவ வழிபாட்டியல்
5. **இடைவரவு போதனாசிரியர்:-**
   கர்நாடக சங்கீதம் (வாய்ப்பாட்டு)
   பண்ணிசை
   வயலின்
   வீணை

**சம்பள அளவுத்திட்டம்:-**

1. தற்காலிக உதவி விரிவுரையாளர் - ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு
2. தற்காலிக கட்டுரை ஆசிரியர் - ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றுக்கு
3. தற்காலிக போதனாசிரியர் தரம் II (ஆங்கிலத்தில்)- ரூபா 4,750/- (நிலையானது) மாதமொன்றுக்கு
4. தற்காலிக போதனாசிரியர் (பரதநாட்டியம்/ மிருதங்கம்/கர்நாடக சங்கீதம் [வாய்ப்பாட்டு] வீணை) ரூபா 4,100/- (நிலையானது) மாதமொன்றுக்கு
5. இடைவரவு விரிவுரையாளர்- ரூபா 150/- மணிக்கு
6. இடைவரவு போதனாசிரியர்- ரூபா 75/- மணிக்கு 1993 மே 12ஆம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போரிடமிருந்தும் 1994இல் இறுதித் தேர்வுக்குத் தோற்றுவோரிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்ப்பெற்ற படிவங்களில் அனுப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:-**

விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு 13, ஆட்டுபட்டித்தெரு 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-11-16. (சி-9695)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் இலக்கை அடைவதற்கு

# பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப நல்ல திட்டங்களைத் தாருங்கள்

### அபிவிருத்திக் கருத்தரங்கில் தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணம், நவ. 18

''தமிழீழ பொருளாதாரத்தைக்கட்டிஎழுப்பும் எமது தேசியத் தலைவரின் செயற்பாடுகளுக்கு இன்று இங்கு உருவாகும் திட்டங்கள் பக்க துணையாக அமையும். எனவே சிறந்த திட்டங்களைத் தயாரித்துத் தாருங்கள்.

இப்படிக் கூறினார் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்.

அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடத்தும் ''அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்'' என்ற தலைப்பிலான 3 நாள் கருத்தரங்கின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. க. கரிகாலன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ப. திலகநாயகம், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் ஆகியோரின் மங்கள விளக்கேற்றலுடன் கருத்தரங்கு ஆரம்பமானது.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனின் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் திரு. தமிழ்ச்செல்வன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது தேசத்தின் கட்டுமானங்களையும், எதிர்கால திட்டங்களையும் ஆராய இங்கு கூடியிருக்கின்றோம்.

மிக ஆரோக்கியமானதும், திடகாத்திரமானதுமான முயற்சிக்கு உதவும் வகையில் தீர்மானங்களும், திட்டங்களும் எடுக்கப்பட வேண்டும்.

போராட்ட காலத்தில் எம் மக்கள் மீது பொருளாதாரத் தடையை விதித்தும்—

போக்குவரத்து தடையை கொண்டு வந்தும்—

எம்முடனான வெளிநாட்டு தொடர்புகளை துண்டித்தும் — முன்னைய அரசுகள் செயல்பட்டன.

ஆனால் எமது மக்கள் எதிரியின் அந்தச் சவால்களுக்கு எல்லாம் முகம் கொடுத்து இன்று தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்.

#### மிருகத்தனமாக அழித்தனர்

காலம் காலமாக நாடாளுமன்றம் மூலமும், சாத்வீக அடிப்படையிலும் எமது மக்கள் முன்னெடுத்த போராட்டத்தை முன்னைய அரசுகள் மிருகத்தனமாக அழித்தனர். இதனால் தான் எமது தேசியத் தலைவர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் நாம் விடிவு பெற்று வாழலாம் என்று எமது மக்கள் கருதி போராட்டத்துடன் இணைந்துள்ளனர்.

தேசியத் தலைவரின் கட்டுப்பாடான வகையிலான போராட்ட வளர்ச்சி தான் இன்று எம்மைத் தேடி அரசு வருவதற்கு காரணம்.

எமது தேசியத் தலைவர் பொருளாதாரக் கட்டுமானத்தை வளர்க்க தனி அமைப்பையே உருவாக்கியுள்ளார். அதுபோல சிவில் நிர்வாகத்தை கொண்டுவர பல அமைப்புக்களை உருவாக்கியுள்ளார்.

தேசியத்தலைவரின் பொருளாதாரக் கட்டுமானத்துக்கு இன்றைய கூட்டத்தில் எடுக்கும் தீர்மானங்கள் பக்கத் துணையாக இருக்கும்.

இன்று எமதுபிரச்சினைக்கு தீர்வு காண சமாதான முயற்சிகள் முன்எடுக்கப்படுகின்றன.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டது. ஆனால் பொருள்கள் இங்கு வந்து சேரவில்லை.

மக்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பாதை ஒன்று திறக்கப்பட வேண்டும். அரசின் நல்லெண்ண நடவடிக்கையாக அதைச் செய்யலாம்.

சமாதான முயற்சியில் எமது தலைவர் நல்லெண்ண சமிக்ஞை காட்டிக் கொண்டிருக்கிறார்.

சிங்கள மக்களின் ஆணையை சந்திரிகா பெற்றுள்ளார். அவர் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும்.

ஆனால் இந்நிலையில் கறைபடிந்த, கசப்பான கடந்த காலத்தை நாம் மீட்டுப் பார்க்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

#### திரு. செம்பியன்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் திரு. வி. செம்பியன் பேசுகையில் கூறியதாவது:

இந்தப் பிராந்தியத்தின், மக்களின் அபிலாஷைகளை வெளிக் கொணரத்தக்கதான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இங்கு வராமலே தெற்கில் இருந்து தயாரித்த திட்டங்கள் தோல்வியில் முடிந்தன.

நிலைத்து நிற்கக் கூடியதும் —

உச்ச பயன்பாட்டை தரக் கூடியதும் — மனித ஆற்றலை முழுமையாக பயன்படுத்தக் கூடியதுமான திட்டங்கள் அமைய வேண்டும்.

குடா நாட்டுக்கு வெளியில் மக்கள்குடியேறத்தக்க வகையில் —

அவர்கள் அங்கு செல்ல அவர்களை ஈர்க்கும் வகையில் — திட்டங்களை அங்கு நடைமுறைப்படுத்த வேண்டும்.

அங்குள்ள மூலவளங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்து தன்னிறைவு கண்டு ஏற்றுமதி செய்யும் நிலைஉருவாக வேண்டும்.

வெளிநாட்டு தரத்துக்கு ஏற்ற வகையில் கூட்டு கம்பனி முறையில் திட்டங்கள் அமுலாக வேண்டும்.

தமிழ் மக்களின் நிபுணத்துவ ஆற்றல் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரந்து கிடக்கின்றது. அவை முழுமையாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

ஒரு திட்டத்தை வகுக்கும் போது வருடாந்த திட்டம் என்ற ரீதியில் அதனைச் செயற்படுத்த வேண்டும். ஒவ்வொரு வருடமும் இலக்கு ஒன்று நிர்ணயிக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. சு. டொமினிக், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. ஆ. ரவி, அரசசார்பற்ற இணையப் பிரதிநிதி வே. ஜெயராஜசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

(இ-3)

## குழாய்க் கிணறுகளை சேதமாக்கும் விஷமிகள்

யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளின் குழாய்கள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

மாநகர பொறியியலாளர் பி. தவராஜா இதனைத் தெரிவித்தார்.

விஷமிகள் சிலர் குழாய் கிணறுகளின் குழாய்களுக்குள் சிறியகற்களைப் போடுகின்றார் என்றும்—

குழாய்க் கிணறுகளின் கைப்பம்புகள் களவாடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகரப்பகுதியில் மொத்தம் 30 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் கொழும்புத்துறை, பாஷையூர், கொட்டடி, யாழ். மடம்வீதி தேவரிக்குளம் போன்ற பகுதியில் உள்ள குழாய்க் கிணறுகளே சேதமாக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

குடிதண்ணீர் இருக்கும் இடங்களைக் கண்டறிந்து குழாய்க் கிணறுகளையும்—

இரவு நேரங்களில் பொது மக்களின் போக்குவரத்து வசதிக்காக வீதிகளில் வீதி விளக்குகளையும் மாநராட்சி மன்றம் அமைத்து வருகின்றது.

ஆனால் இவற்றுக்கு இடையூறு விளைவிப்பதில் விஷமிகள் வேண்டும் என்றே செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-18)

## கமக்காரர் அறிமுக அட்டை மீள புதுப்பிக்க அறிவுறுத்து

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு தற்போது விவசாயிகளின் பயன்பாட்டில் இருந்து வரும் கமக்காரர் அறிமுக அட்டைகள் 1995 ஆம் ஆண்டின் பயன்பாட்டிற்கென மீளப்புதுப்பித்தல் செய்யப்பட்டு வருகின்றன. இவ் வேலைகள் விவசாயிகளின் வசதி கருதி தொடர்ந்து மேலும் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இதுவரை மீளப்புதுப்பிக்கத் தவறிய விவசாயிகள் அனைவரும் தமது அட்டைகளை மீளப் புதுப்பித்தல்செய்து கொள்ளுமாறும்—

இதுவரைகாலமும் அட்டை பெறாதுள்ள விவசாயிகள், தமது பயிர் செய் நிலங்களையும் பதிவு செய்து, கமக்காரர் அறிமுக அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், விற்பனை நிலையங்கள் அனைத்திலும் விதை தானியங்கள், இரசாயனங்கள், எரிபொருள்கள், விவசாய உபகரணங்கள் போன்ற அனைத்து விவசாயஉள்ளீட்டுப் பொருட்களையும் கமக்காரர் அறிமுக அட்டைகளில் பதிவு செய்து பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் அட்டை பெற்றுக் கொள்ளாதுள்ள ஒவ்வொரு விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகாமல் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

## பயிர்ச் செய்கையை மேற்கொள்ள; மண்அரிப்பை தடுக்க உவர்நில ஆய்வு

சிறுகடல்களை அண்டிய வெளியான பிரதேசங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமுகமாகவும்—

மண்ணரிப்பைத் தடுத்து உவர்த்தன்மையை குறைப்பதற்குமாகவும்— இந்த இடங்களில் வளரக் கூடியதும் உவர்த்தன்மையை மாற்றக் கூடியதுமான மரங்களை இவ்வாண்டு நடுகை செய்வதற்கென உவர்நில ஆய்வு ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இதனடிப்படையில் இன உவர்நீரை அண்டிய அணைக்கட்டு ஓரங்களில் 10 அடி இடைவெளிகளில் சின்னக் கருவேல், வெல்வேல், சவுக்கு, இலைக்கருவேல் ஆகிய இன மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இவ் ஆய்வில் நிலப்பயன்பாட்டு உத்தியோகத்தர். அரச, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் கோப்பாய்உதவி திட்டமிடல் பணிப்பாளர், கோப்பாய்விவசாய போதனாசிரியர், கோப்பாய் வடக்கு கிராமசேவகர், வன. இலாக வட்ட வன உத்தியோகத்தர், கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஆகியோர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## புலிகளின் குரல் 4 ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், நவ. 18

புலிகளின் குரல் நான்காம் ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிறன்று பிற்பகல் 3 - 30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## வெளிச்சமின்றி செல்லும் மினிபஸ்கள்

தென்மராட்சி, நவ. 18

சாவகச்சேரியில் இருந்து தினமும் மாலை 6-30 மணிக்குப்பின் பளைக்குப் புறப்படும் மினிபஸ்கள் அநேகமாக வெளிச்சமின்றியே செல்வதாக பயணிகள் பலரும் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து அதிகம் உள்ள கண்டி வீதியில் அவ்வாறு மினிபஸ்கள் வெளிச்சமின்றிச் செல்வது பயணிகளுக்கு பீதியை ஏற்படுத்துவதாகவும் அத்துடன் பயணிகள் உரிய இடங்களில் இறங்கிக் கொள்வதற்கு சிரமப்படுவதாகவும் கூறப்படுகிறது. (ஐ-117)

## கொட்டாஞ்சேனைப் பகுதியில்

# குடியிருப்பாளர் விவரம் பொலீஸாரல் சேகரிப்பு

கொழும்பு, நவ. 18

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு கடந்த திங்களன்று சென்ற பொலீஸார் குடும்பத்தவர்களின் பெயர் மற்றும் விவரங்களை பொலீஸில் பதிவு செய்யுமாறு கேட்டதை அடுத்து அப்பகுதி மக்கள் குழப்பமடைந்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வீடு வீடாகச் சென்ற பொலீஸார் மூன்று வீடுகளுக்கு ஒரு படிவத்தை கொடுத்து அதனை போட்டோ பிரதி செய்து அதன் பிரதிகளை மற்றைய இரு வீடுகளுக்கும் கொடுக்குமாறு கூறியுள்ளனர். தாம் மீண்டும் வரும் போது அதனைப் பூர்த்தி செய்து தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனராம்.

அப்பகுதியில் திடீரெனக் குடியிருப்பாளர்களின் பெயர் விவரங்களை பதிவு செய்யுமாறு கோரப்பட்டிருப்பது குறித்து குடியிருப்பாளர்கள் காரணம் ஏதும் அறியாது குழப்பமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைத்துள்ள சுற்று நிருபத்தின்படி ஒவ்வொரு பொலீஸ் பிரிவிலும் வசிக்கும் குடும்பங்களின் பெயர் விவரங்களை சேகரிக்குமாறு பணிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆலயங்களில்

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் தேவஸ்தான லட்சார்ச்சனை இன்று தொடக்கம் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# சோதியையும் சுடரையும் துதித்து உய்ய கார்த்திகையின் கார்த்திகை

**- மூளாய் அருணாசலம் -**

''ஒளி வளர் விளக்கே'', ''மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே'', ''மின் ஆர் உருவ விகிர்தா'' என்றெல்லாம் இறைவனைப் போற்றினார்கள் பேரருளாளர். இறைவனைச் சோதி வடிவில் கண்டு வழிபடும் புனித நாளாக விளங்குவது திருக்கார்த்திகைத் தினம்.

அது கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திர நாளன்று வரும். இவ்வருடத்திய கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். திருக்கார்த்திகை நாள் ''கார்த்திகை விளக்கீடு'' எனச் சிறப்பித்துப் பேசப்படுவது. கார்த்திகைத் திருவிழா முருகன் ஆலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் ஒளி விளக்கு ஏற்றிச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பிரம விட்டுணுக்களின் செருக்கை அடக்கச் சிவபிரான் சோதியாய்த் தோன்றிய வரலாறு ஒன்றைக் கந்தபுராணம் பேசுகிறது. அது திருக்கார்த்திகையுடன் தொடர்பு கொண்டது.

''யாமே பிரமம் ... யாமே பிரமம்'', என்று தம்முள் செருக்குற்ற திருமாலும் பிரமனும் கொடிய போரைச் செய்தனர். போரின்போது பிரயோகிக்கப்பட்ட படைக்கலங்களின் வெப்பம் தாங்காது உயிர்கள் துன்புற்றன. உலகங்கள் எரிந்தன. உயிர்களின் துன்பத்தைப் போகக் திருவுளங்கொண்ட சிவபிரான், இருவருக்குமிடையே சோதிவடிவாகத் தோன்றினார். ''இச்சோதியின் அடியையும் முடியையும் கண்டவரே உயர்ந்தவர்'' என்று விண்ணில் ஒரு குரல் எழுந்தது.

அன்னப்பட்சியாக உருவெடுத்த பிரமன் விண்ணுக்குள்ளும், பன்றி உருக்கொண்ட திருமால் மண்ணுக்குள்ளும் புகுந்தனர் பல காலம் தேடியும், இருவரும் அடியையும் முடியையும் காணாது அலுப்பும் சலிப்பும் அடைந்து, தம்மைவிட மேலான ஒன்று உண்டு என உணர்ந்து, அகந்தை நீங்கித் தெளிந்த சிந்தையராகிச் சிவபிரானைத் துதித்தனர்.

சோதியின் நடுவே சிவபிரானைத் தரிசித்த பிரமனும், திருமாலும் ''ஐயனே, அன்பர்க்கு மெய்யனே, நாங்கள் மாயையினால் அகந்தை கொண்டு, அறிவு மயங்கிப் போரிட்டோம். தேவரீருடைய அடியையும் முடியையும் அறியும் ஆற்றல் எமக்கு இல்லை. எங்கள் பிழைகளைப் பொறுத்தருளுக'' என வேண்டி நின்றனர்.

அத்தருணம் சோதிவடிவாகத் தோன்றிய சிவபிரான் இலிங்க உருக் கொண்டு ''கார்த்திகைத் திங்களில், கார்த்திகை நாளிலே, இது போல் ஒரு சோதி காட்டுவோம். அதனை வழிபடுபவர்கள் யாவர் ஆயினும், அவர் பாசமாகிய இருட்படலத்தினின்றும் நீங்கி, சிவஞான ஒளிபெற்று, நம்திருவடி சேர்வர்'' என்று அருள் புரிந்தார்.

சிவபிரான் பிரமனுக்கும், திருமாலுக்கும் அருள்பாலித்த இடம் திருவண்ணாமலை என்னும் தலமாகும். அன்று தோன்றிய அக்கினிப்பிழம்பே, இன்று அங்கு மலையாக விளங்குகிறது. திருவண்ணாமலை பஞ்சபூதத் தலங்களில் தேயுத்தலம். அதனால் சிவமூர்த்தி அங்கு தேயுலிங்கமாக அமர்ந்துள்ளார்.

ஆண்டு தோறும் கார்த்திகை மாதக் கார்த்திகை நாளில் மலை உச்சியில் ஒரு சோதி புலப்படும். அது கார்த்திகைத் தீபம் என்று தமிழ் நாட்டு மக்களால் போற்றிப் புகழ்ந்து வழிபாடு செய்யப்படுகிறது.

சிவபிரான் சோதியாய்த் தோன்றியது திருக்கார்த்திகைத் தினத்தன்று என்பதும், அந்தச் சோதி இலிங்க வடிவான குன்றாகியது மாசி மாத (மஹா) சிவராத்திரி தினத்தன்று என்பதும் புராணங்கள் கூறும் வரலாறு.

திருக்கார்த்திகைத் தீப ஒளி வழிபாடு நம் மனதில் மண்டிக்கிடக்கும் அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான ஒளியை நாட்டவல்லது. இத்தினத்தில் அனைத்து இடங்களிலும் சோதியையும் சுடரையும் கண்டு வணங்கி யாவரும் எல்லா இன்பமும் எய்துவோமாக.

கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திர நாள் சோதியையும், சுடரையும் துதித்து உய்வதற்கு மிகச் சிறப்பான நாளாகும். ✶


முதலாவது

பிறந்ததின வாழ்த்து



★ செல்வி தர்மினி சிவலிங்கம் ★

கோப்பாய் தெற்கு கோப்பாயைச் சேர்ந்த சிவலிங்கம் தனலக்சுமி தம்பதிகளின் புதல்வி செல்வி தர்மினி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (18-11-94) தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, உஷா அக்கா, சுதா அக்கா, துஷி அக்கா, குமாரி மாமி, சிவாஜி சித்தா, புண்ணியராஜா சித்தா, கிளிநொச்சியைச் சேர்ந்த ராஜா சித்தா, சித்தி, தர்ஷி அக்கா, அதே இடத்தைச் சேர்ந்த அப்பம்மா, அப்பப்பா, சசி மாமி, பெரியம்மா, பெரியப்பா, அக்காமார்கள் மற்றும் ''தர்மினி இன்சுவை உணவகம்'' ஊழியர்கள் அனைவரும் இன்று போல் என்றும் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தர்மினி இன்சுவை உணவகம்,
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(33805)




புதிய அமைச்சரவை பதவியேற்ற பின்னர் புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், புதிய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் அமைச்சர்களுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட படத்தை மேலே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வான் கோழிச் சேவல் விற்பனைக்குண்டு. ஸ்ரேசன் றோட், இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (7809)

யாழ். புதிய பஸ் நிலையத்திற்கு முன் ஸ்ரான்லி வீதி முகப்பாக ஒரு அறையும், அம்பலவாணர் வீதி முகப்பாக இரு அறையும் கிணறு மலசலகூடத்துடன் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (33744)

பிரம்பு, குசன் செற்றி, முதிரை தேக்கு அலுமாரிகள், டிரெசிங்ரேபிள், கபேட், மேசை, கட்டில்கள், கோழிக்கூடு (குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில்), பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (33804)

### உடன் விற்பனை

சாவகச்சேரி வடக்கு, டச்சு வீதி, முதலாம் ஒழுங்கையில் 5 பரப்பு காணி, நல்லதண்ணீர்க் கிணறுடன் மா, தென்னையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். கந்தசாமி, சட்டத்தரணி, சாவகச்சேரி. (சி–9693)

### காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கில் கோண்டாவில் இ. போ. ச. டிப்போவுக்கு அண்மையாக களஞ்சிய வசதி கொண்ட, கட்டடத்துடன் கூடிய 2½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி லிங்கா துரைராசா, சட்டத்தரணி, பிரசித்தநொத்தாரிசு, 19, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர். (சி–9691)

### விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி–9597)

### தேவை

பலகாரவகைகளும், சுவீட்ஸ் வகைகளும் தயாரிக்கக் கூடியவர் தேவை. தொடர்பு கொள்ளவும்: லிங்கம் குளிர்களி நிலையம், அர்ச்சுனா வீதி (வெலிங்டன் சந்தி), யாழ்ப்பாணம். [8017]

### றேடியோக்கள் திருத்துதல்

சகல கசட்றேடியோக்கள், T. V., டெக், கார் கசற்றுக்கள் மற்றும் ஒட்டோமற்றிக் எலெக்றொனிக் மேசை, சுவர், கைக்கடிகாரங்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வான்வில் அருகில்), கிளை: கண்டி றோட், சாவகச்சேரி மானிப்பாய், ஆனைக்கோட்டை. (சி–9616)

### தவறிவிட்டது

S. நவரட்ணம் ஆகிய எனது கறுப்புநிற கைப்பை 16–11–94 அன்று கைலாச பிள்ளையார் கோயில் மேற்கு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மியூசியம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (33803)

வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகிய எனது அடையாள அட்டையும் (350690123V), உத்தியோக அடையாள அட்டையும் 16–11–94இல் யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 15, சென்பீற்றேஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி–9692)

### சேவை

மூன்று மொழிகளிலும் றபர் ஸ்ராம், டேற் ஸ்ராம், பிளாஸ்டிக் நேம் போட், நம்பர் பிளேட், விளம்பர ஓவியம் லேபிள் டிசைன் யாவும் இரண்டு வருட உத்தரவாதத்துடன் 'வீமா றபர் ஸ்ராம்ஸ்', 234, நாவலர் வீதி (தனியார் வைத்தியசாலை முன்பாக), ஆனைப்பந்தி. (33769)

### திருமண சேவை

எம்மிடம் மணமக்கள் இருபாலருமுண்டு. நேரில் கடித மூலம். தொடர்பு: இயக்குநர், விநாயக மாங்கல்ய சேவை, 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். (33789)

## முல்லையில் பனை நடுகை

யாழ்ப்பாணம், நவ. 18

முல்லையில் கற்பகச் சோலைத் திட்டத்தின் கீழ் பாரிய பனை விதை நடுகையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

---

**தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
**(வ – து)**

## இளைக்குழுத் தேர்தல்

**1994 – 11 – 19 சனிக்கிழமை**

சங்கத்தின் 108 — 126 வரையான பதினைந்து கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல் 19–11–1994 சனிக்கிழமை நீதி மன்ற வீதி, மல்லாகத்தில் அமைந்துள்ள யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கீழ்க்காணும் நேர ஒழுங்கின்படி நடைபெறும். 10–10–1994இல் காட்சிப்படுத்திய வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படும் அனைவரும் சமுகமளித்துக் கிளைக்குழுத் தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

★ கூட்டம் ஆரம்பமாகும் நேரம்:
**1994—11—19** சனி முற்பகல் 11 மணி

★ நியமனம் தாக்கல் செய்யும் நேரம்:
**1994—11—19** சனி முற்பகல் 11 — நண்பகல் 12 மணி

★ ஆட்சேபனை ஏற்றுக் கொள்ளும் நேரம்:
**1994—11—19** சனி நண்பகல் 12 — பிற்பகல் 1 மணி

★★ தேர்தல் நடைபெறும் நேரம்:
**1994—11—19** சனி 1 மணி—3 மணி

எ. சின்னத்தம்பி,
தேர்தல் உத்தியோகத்தர்.

[33791]

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் த. கதிரவேலு**
(ஆசிரியர்)

**திதி: 18–11–1994**

நல்லாசானாய், அதிபராய் பணியாற்றும் வேளையில் இறைவன் தன்னடிகளுக்கு அழைத்தது ஏனோ ஐயா! தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (33796)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 31 — 12 — 1931



மறைவு: 22 — 11 — 1991

**அமரர் வே. மாரிமுத்து**
(காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை – கூரை பொருத்துனர்)
(மாவைகலட்டி, தெல்லிப்பளை)

**திதி: 18 – 11 – 1994**

ஆண்டுகள் மூன்று சென்றாலும், எங்கள் அன்புத் தெய்வத்தின் வதனம் எமது நெஞ்சை விட்டகலவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமகன்.

தவசிகுளம்,
கொடிகாமம். [illegible]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 1995

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப்பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/ உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994 டிசம்பர் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

01. எழுதுப்பொருட்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் – மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகலவகை ஹார்ட்வெயார் பெயின்டுகள், வானிஸ்
07. இயந்திர கருவிகளும், உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும்,, உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப்பொருட்களும், கண்ணாடிப்பொருட்களும்
12. மரம்
13. கட்டிடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள். விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிபாகங்கள், துணையுறுப்புகள்
17. ஆயுள்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துகள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

**சேவைகள்:**

01. அச்சிடுதல், புளொக் செய்தல், றப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள் கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. குளிர் சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
04. டீசல் தளபாடங்களின் திருத்த வேலைகள்
05. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
06. கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
08. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

**எந்திரவியல் சேவைகள்:**

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டர்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04. மின்சார வயறிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/ திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள்/கேற்றுகள் உருவமைத்தல்/ பொருத்துதல்
07. கட்டடங்கள்/கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்
09. பட வரைதல் (புளூ பிறின்ரிங் றோயிங்ஸ்)

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள்/சேவைகள்-1995' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்கள்ம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா. 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற் கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலை மனுக்களை கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை சேவை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் [illegible] பொருட்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
02. பெயரும் விலாசமும்
03. தொலைபேசி இலக்கம்
04. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
05. வியாபாரத்தின் தன்மை
06. வங்கியாளர்களின் பெயர்
07. கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்
08. ICTAD பதிவு இலக்கம்/புத்தக இலக்கம் (3ற்கு மட்டும்)

*குறிப்பு:*

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.

எந்திரவியல் சேவை 3 இற்கு பின்வருவோர் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(அ) ICTAD தரப்படுநலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி/அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி / வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம் மாவட்டங்களில் உள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம் மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7 இற்கு மட்டும்) தருக.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி–9685)

---

# பிறந்த நாள் வாழ்த்து



## செல்வன் வி. கபில்தேவ்

**18 — 11 — 1994**

விக்னராசா – மாலினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கபில்தேவ் தனது முதலாவது பிறந்த நாளை குஞ்சர்கடையில் உள்ள தனது இல்லத்தில் இன்று 18 – 11 – 1994 இல் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மாமார், தாத்தாமார், பூட்டி, மானிப்பாயில் உள்ள பெரியப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம், அத்தை குடும்பங்கள், கனடா பெரியப்பா குடும்பம், சுவிஸ் சித்தப்பா குடும்பங்கள், சுவிஸ் மாமா குடும்பங்கள் மற்றும் உற்றார், உறவினர்கள் இவரை பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

குஞ்சர் கடையடி,
கரணவாய். [33770]

---

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**கந்தரோடை, சுன்னாகம்**

## ஆண்டு 6 - அனுமதி

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி **30 – 11 – 1994** ஆகும்.

ஆண்டு **5** பொதுத் தேர்வு, புலமைப் பரிசில் பெறுபேற்றின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்

- அதிபர்.

[சி–5740]

---

**ST. JOHN'S**
**PARISH NURSERY SCHOOL**
**பரி. யோவான் ஆலய**
**பாலர் பாடசாலை**
**சுண்டிக்குளி.**

1995ஆம் ஆண்டுக்குரிய அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் ஆலய காரியாலயத்தில் பெற்று, விண்ணப்பிக்கப்பட வேண்டிய இறுதி நாள் **30-11-94** என்பதை அறியத் தருகிறோம்.

**– Parish Priest.**

[33802]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## இருட்டறை ஓலமா?

திருமதி சந்திரிகா குமாரதுங்கா, அமோக வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றதை யொட்டி, தமது நல்லெண்ணத்தைத் தெரிவிக்கும் வகையில், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன், முப்படைகளுக்கு எதிரான தாக்குதல் நிறுத்தத்தை மேற்கொண்டு நேற்றுடன் ஐந்து நாள்கள் முடிந்து விட்டன.

தலைவரின் அந்த நல்லெண்ணத்துக்கு, நேற்று, இப்பத்தியை எழுதும் வரை அரசாங்கத் தரப்பில் இருந்து பதில் நல்லெண்ண நடவடிக்கை எதுவும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் நிறுத்தம் குறித்து அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தல் கிடைக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரான கர்மசிறி சேனநாயக்கா, புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளரிடம் தெரிவித்தார். அரசாங்கம் பதில் நல்லெண்ண நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில் அக்கறைகாட்டவில்லை என்பதே அதன் தொனியாக இருந்தது.

தலைவர் பிரபாகரனின் நல்லெண்ணத்துக்குப் பதில் நல்லெண்ண நடவடிக்கையை மேற்கொள்வதில் அரசு காட்டும் அக்கறையின்மை அல்லது தாமதம் ஒரு வகைப் புதிராகவே தென்படுகிறது. இனப் பிரச்சினைக்கு, அரசியல் தீர்வு, பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவற்றுக்கு மக்களிடம் இருந்து அமோக ஆதரவு பெற்றுப் பதவியேற்றிருக்கும் சந்திரிகா, தமிழ் மக்களின் தலைவரின் நல்லெண்ணத்தை ஏற்றுக் கொள்ளப் பின்னடிப்பது ஏன் என்ற கேள்வி எவர் மனதிலும் இயல்பாகவே எழும்!

ஓகஸ்ட் தேர்தல் முடிந்து தாம் பிரதமராகப் பதவியேற்றதும், சந்திரிகா தமது நல்லெண்ணத்தைத் தெரிவிக்கு முகமாக, தமிழ் மக்களுக்கு எதிரான பொருளாதாரத் தடையைத் தளர்த்தியதோடு விடுதலைப் புலிகளுக்கு நேசக்கரமும் நீட்டியிருந்தார். அந்த நேசக்கரத்தைதலைவர் பிரபாகரன் தட்டி விடாமல் ஏற்றுக் கொண்டார்.

அந்த வகையில், இப்போது சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் தலைவர் பிரபாகரன் தமது நல்லெண்ணமாக ஒரு வார கால தாக்குதல் நிறுத்தத்துக்கு உத்தரவிட்டார். சந்திரிகா உண்மையான அரசியல் கனவான் தனமுடையவராக இருந்தால், இம்முறை தமது பதில் நல்லெண்ணத்தை தாமதியாது தக்கவாறு (செயல் ரீதியாகத்) தெரிவித்திருக்க வேண்டும்.

ஆனால் அதற்குப் பதிலாக சந்திரிகாவின் பணிப்புக்கு உட்பட்ட முப்படைகள், தமிழர் தரப்பின் நல்லெண்ணத்தைக் கண்டு கொள்ளாதது போல, வழமைபோல தமது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல், வல்வைக் கடலில் மீனவர் மீது தாக்குதல், சாவகச்சேரியில் பயணிகள் வாகனம் மீது தாக்குதல் ஆகிய சம்பவங்கள் இராணுவத்தின் 'விருதுக்கு வேட்டையாடும்' பண்பு தவறிய கபடத்தனத்தையே காட்டுகிறது. இதனை வெறுமனே இராணுவ அதிகாரிகளின் போக்காகக் கருதிவிட முடியாது. அரசாங்கத்தின்—ஜனாதிபதியின்—சந்திரிகாவின்—ஏப்பத்தனம் என்றே கொள்ள வேண்டும்.

இந்தப் போக்கு, குணாம்சம், சந்திரிகா விரும்பும் சமாதானத்தை அடைவதற்குப் பெரும் குந்தகமாக அமையுமே அன்றி, அதனை எட்டுவதற்கு ஒரு போதும் உதவமாட்டாது. நல்லெண்ணம் காட்டுபவருக்கு மரியாதைக்காவது [Courtesy] பதிலும் நன்றியும் [அவற்றைப் பிரதிபலிக்கும் நடவடிக்கையும்] கூறாவிடில் அவரைப் பற்றி தமிழர்கள் கொண்டுள்ள நல்ல அபிப்பிராயம் மறைந்து போகும். அதன் பின்னர் சமாதானத்தை பூட்டிய இருட்டறையில் இருந்து ஓலமிடலாமே அன்றி, கண்ணாலும் காணமுடியாது!

# தமிழ் அகதிகளை வெளியேற்றுவதில் சுவிஸ் அதிகாரிகள் மிகத்தீவிரம்

## ஆட்சேபங்கள் பயனற்றுப் போயின

அச்சுவேலி, நவ. 18

திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றுவதில் சுவிஸ் நாட்டு அதிகாரிகள் மிகத் தீவிரமாகச் செயலாற்றுகிறார்கள்.

இதனால் தங்களை வெளியேற்றுவதை ஆட்சேபித்து தமிழ் அகதிகள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் பயனற்றுப் போய் விட்டன.

இந்த நிலையில் சுவிட்ஸர்லாந்தில் இருந்து வேறு நாடுகளுக்கும் சிலர் தப்பிச் சென்றுள்ளனர். பலர் தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் அண்மையில் சுவிஸிலிருந்து நாடு கடத்தப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அச்சுவேலி வாசியான திரு. க. விக்னேஸ்வரமூர்த்தி.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திரு. விக்னேஸ்வரமூர்த்தி (44 வயது) 1991 ஆம் ஆண்டு தொடக்கம் சுவிஸில் வாழ்ந்து வந்தவர்.

நாட்டை விட்டு வெளியேற்றுவது தொடர்பான முன்னறிவிப்பு வழங்கப்பட்ட இவரை திடீரென கைது செய்த பாதுகாப்புத் துறையினர் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைத்தனர்.

தன்னை கைது செய்த சுவிஸ் நாட்டு பாதுகாப்புத் துறையினர் கண்ணியமான முறையில் நடத்தியதாகவும் தனது வங்கி வைப்பு பணத்தையும் மீளப் பெற்றுத் தந்ததுடன் நிவாரணமாக பண உதவி வழங்கியதாகவும் — திரு. விக்னேஸ்வரமூர்த்தி கூறினார்.

(அ-11)

# அச்சுவேலிப் பகுதியில் தொழுநோய் ஆபத்து!

அச்சுவேலி, நவ. 18

அச்சுவேலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரப் பரிசோதனைகளின் பின் பத்கமேனிப் பகுதியைச் சேர்ந்த சிலருக்கு தொழுநோய் ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து அந்நோய் மேலும் பரவாமல் இருக்கத் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள சிலரில் தொழுநோய் ஆரம்ப நிலையில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தினரும், அப்பகுதி மக்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கினால் தொழுநோய் மேலும் பரவாமல் தடுப்பதுடன், அதனை முற்றாக ஒழித்து விடமுடியும் என்று அச்சுவேலி சுகாதாரப் பரிசோதகர் திரு. இ. இராசேந்திரம் தெரிவித்தார்.

# தொண்டா, ஹட்சன், ரணசிங்கா குறித்து ஐ. தே. க. அடுத்தமாதம் முடிவெடுக்கும்

கொழும்பு, நவ. 18

பொ. ஐ. மு. அரசுடன் இணைந்து கொண்ட ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் எம். பியான அமைச்சர் எஸ். தொண்டமான் மற்றும் ஐ. தே. க. உறுப்பினர்களான ஏ. ஜே. ரணசிங்கா, ஹட்சன் சமரசிங்கா ஆகியோர் தொடர்பாக ஐ.தே. கவின் நிறைவேற்றுக் குழு அடுத்த மாதம் 3 ஆம் திகதி கூடி தீர்மானம் எடுக்கவுள்ளது.

ஐ. தே.கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துகோறள இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

ஐ. தே. கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ராஜாங்க அமைச்சருமான ஏ. ஜே. ரணசிங்கா மற்றும் ஹட்சன் சமரசிங்கா ஆகியோர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிட்டமை தெரிந்ததே. (ஐ)

## புலிகளின் குரல் வானொலியில்

**18 — 11 — 1994**
**வெள்ளி இரவு**

★ 8-01 — கலைமஞ்சரி— நூல் அறிமுகம் அறிமுகமாவது தி. உதயசூரியன் எழுதிய ''மாறாத மனங்கள்'' சிறுகதைத் தொகுதி — சிறுகதை — இலக்கியா எழுதிய ''புதிய மாற்றம்'' கவிதை — நல்லை அமிழ்தன் எழுதிய ''தமிழன் ஆட்சி''

★ 8-25 — கணப்பொழுது — சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் லாலா ரஞ்சன்''

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய ''கிழக்குத் திமோர் இன்னும் உயிர் வாழ்கின்றது''

★ 9-00— மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**19— 11 — 1994**
**சனி காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்.

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

★ 8-00 —மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## புலமைப் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, நவ. 18

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாககொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது।

# இன்று நடைபெறவுள்ள சிரமதானங்கள், கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 18

மாவீரர் எழுச்சிவாரத்தை முன்னிட்டு குடாநாட்டில் இன்று வெள்ளிக்கிழமை இரவு எழுச்சிக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

★ யாழ்.வட்டம்—பாரதி ச. ச. நிலையம், கொட்டடி ஸ்ரார் ச.ச. நிலையம்.

★ கோப்பாய் வட்டம்— கோப்பாய் சூசையப்பர் கோயில், உடுவில் கணேசா ச ச. நிலையம்.

★ நல்லூர் வட்டம்— அரியாலை அருணோதயா ச.ச. நிலையம், பாரதி ச. ச. நிலையம்.

★ சண்டிலிப்பாய் வட்டம்— சுதுமலை பராசக்தி ச.ச. நிலையம்.

★ சங்கானை வட்டம்— மூளாய் இந்து இளைஞர் மன்றம், சங்கரத்தை தமிழன் ச.ச. நிலையம்.

★ உடுவில் வட்டம்— இணுவில் சிந்து ச.ச. நிலையம், மல்லவம் ஞானப்பிரகாசர் கோயில்.

★ உடுவில், தொல்லிப்பளை வட்டம் —காளிகோயிலடி, அளவெட்டி கலைவாணி ச.ச. நிலையம்.

★ பளை வட்டம்— இந்திராபுரம் மக்கள் ச.ச. நிலையம்.

★ கொடிகாமம் வட்டம் —மிருசுவில் விக்ரம் ச.ச. நிலையம்.

★ சாவகச்சேரி வட்டம்— சங்கத்தானை கோபாலரங்கு

★ கைதடி வட்டம்—மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்.

★ கரவெட்டி வட்டம்— அல்வாய் கிழக்கு மாயக்க பாலர் பாடசாலை.

★ தீவக கோட்டம்— நீதிவான் குடியிருப்பு, சத்தியக்காடு குடியிருப்பு.

### சிரமதானம்

இன்று சிரமதானம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

★ கோப்பாய் — புத்தூர் லோறன்ஸ் வீதி திருத்தம்.

★ சண்டிலிப்பாயில் — இரட்டைப்புலம் பிள்ளையார் கோயில் அருகே வீதி சீர்செய்தல், வாய்க்கால் வெட்டுதல்.

★ பளையில்— மாசார் சதீஸ் வீதி, பளை நகர வைத்திய நிலையம்.

★ கைதடியில்— அப்பன் குடியேற்ற திட்டத்தில்.

★ பருத்தித்துறையில்— கரும்புலிகள் குடியிருப்பு, ஓடக்கரை வெள்ள வாய்க்கால்.

தீவகக் கோட்டம்— பரசுத்தி வள்ளியம்மை குடியிருப்பு,

### மாணவர் அமைப்பு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று சிரமதானம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

★ சுன்னாகம் மாவீரர் நிலையத் தூபி, புன்னாலைக் கட்டுவன் சந்தி, சாவகச்சேரி சிவன் கோயிலடி, மாவீரர் நினைவுத்தூபி பருத்தித்துறை மேஜர் ரஞ்சன் பூங்கா.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று ஆசிரியர்களுக்கான மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறும் பாடசாலைகள் வருமாறு:

★ அச்சுவேலி மகாவித்தியாலயம் — பிற்பகல் 1மணி

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி— பிற்பகல் 1மணி

★ மல்லாகம் மகாவித்தியாலயம்— பிற்பகல் 1-30 மணி.

★ யூனியன் கல்லூரி— பிற்பகல் 1மணி.

★ நடேஸ்வராக் கல்லூரி— பிற்பகல் 1-30 மணி.

★ மகாஜனக் கல்லூரி— பிற்பகல் 1-45 மணி.

★ புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி— பிற்பகல் 1மணி. (ஐ)

# இம்மாதம் 23 இல் உருவாகும் தாழமுக்கம் 26 ஆம் திகதியன்று புயலாகமாறும் சாத்தியம்

ஒரு பெரும் போரினால் ஏற்படும் இழப்புக்களைவிட இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் இழப்புக்கள் அதிகமானவையாக இருந்திருக்கின்றன.

பெருவெள்ளம், சூறாவளி, நிலநடுக்கம், திடீரென ஏற்படும் கடற்பெருக்கு, பனிப்புயல், எரிமலை வெடிப்பு முதலிய இயற்கை நிகழ்வுகளால் மனிதனுக்குப் பெருமளவில்உயிர்,உடைமை இழப்புக்கள் ஏற்படுகின்றன.

மனிதனுக்குப் பேரழிவை ஏற்படுத்தும் இந்த இயற்கை நிகழ்வுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடிந்தால் நாம் ஓரளவாவது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். உடைமை இழப்புகளைத் தவிர்க்க முடியாவிட்டாலும் உயிர் இழப்புக்களையாவது தவிர்த்துக் கொள்ள முடியும்

ஆனால் இவ்வியற்கை அழிவுகளை நீண்டகாலம் முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியுமா?

அறிவில் வளர்ச்சியின் இன்றைய நிலையில், ஒரு தாழமுக்கம் அல்லது சூறாவளி உருவாவதற்கு முன்பும் அதுஎங்கே.எப்போதுஉண்டாகும்என்பதைப் பலநாட்கள் முன்னதாகக்கூறமுடியாதுஒரு குறிப்பிட்ட பகுதியில் தாழமுக்கம் உண்டாகக் கூடும் என்பதை ஏறத்தாழப் பத்து நாட்களுக்கு முன்பாகக் கூற முடியும்.

மேலும் அத் தாழமுக்கம் தீவிரமடைந்து சூறாவளியாக உருக்கொண்டபின்பே சூறாவளி யொன்று உருவாகியிருக்கிறது என்றும், அது எந்தத் திசையில் நகர்ந்து செல்கிறது என்றும், அதனால் எந்தெந்த இடங்களில் பலமான காற்றும் மழையும் இருக்கும் என்றும் கூறமுடியும். தாழமுக்கம் ஒன்று புயலாக மாறுமா? என்பதை 24 முதல் 48 மணித்தியாலங்களுக்குள் சில வேளைகளில் அறிவிக்கக்கூடியதாக இருக்கும்.

எரிமலையொன்று வெடிப்பதற்குப் பலநாட்கள் முன்பாகவே அப்பகுதியில் சிறுசிறு நில நடுக்கங்கள் ஏற்படும். அதனால் எரிமலை வெடிப்பதை ஓரளவாவது முன்னதாகவே அறிந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

### நீண்ட காலத்துக்கு முன்னர் அறியலாம்

வரவிருக்கும் இயற்கை அழிவுகளை நீண்டகாலத்துக்கு முன்பாகவே அறிவியல் ரீதியாக அறிந்து கொள்ள முடியாமைக்கு முக்கியமான காரணம்,அவ்வியற்கை அழிவுகளை ஏற்படுத்தும் உண்மைக் காரணிகள் என்ன என்பதை அறிவியல் அறிஞர்கள், இது

## மார்ச்மாதம் வரை நல்ல மழை உண்டு

காலவரைக்கும் அறிந்து கொள்ள முடியாமையேயாகும்.

பூமிக்கும்— சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய கோள்களுக்குமிடையில் ஏற்படும் ஈர்ப்புவிசை மாற்றங்களே பூமியில் ஏற்படும் இயற்கை அழிவுகளுக்கும் வானிலைமாற்றங்களுக்கும் உண்மைக் காரணிகள் ஆகின்றன. இந்த அறிவியல் உண்மையை எனது முப்பதாண்டு ஆய்வுகளில் இருந்து கண்டறிய முடிந்தது. இந்த ஈர்ப்புவிசை மாற்றங்களே மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையையும் பாதிக்கின்றன.

சோதிடத்தை விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி செய்தால் பல அறிவியல் உண்மைகளைக் கண்டுகொள்ள முடியும். இந்த அறிவியல் உண்மைகள் மனித இனத்தை மேம்பாடடையச் செய்யும்.

இயற்கை அனர்த்தங்கள் அனைத்தையும் பல நாட்கள் மட்டுமல்ல பல மாதங்கள், பலவருடங்கள், பலநூற்றாண்டுகள் முன்னதாகவே சோதிட அடிப்படையில் எதிர்வு கூறமுடியும்.

சிலப்பதிகார நாயகி, கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்த காவிரிப்பூம் பட்டினம் ஏன் கடலுள் மூழ்கியது? எப்போது எந்த ஆண்டு மாதம் திகதி கடலுள் மூழ்கியது? என்பதை யெல்லாம் [illegible] னோக்கி ஆராய்ந்து [illegible] துக்கூறிட முடியும்.

வருங்காலத்தில் ஏதாவது நிலப்பகுதி கடலுள் மூழ்குமா? அப்படியானால் அது எப்போது நிகழும்? எங்கே நிகழும்? என்பதைக்கூட பல ஆண்டுகள் அல்லது பல நூற்றாண்டுகள் முன்பதாகவே சோதிட அடிப்படையில் ஆராய்ந்து எதிர்வு கூறமுடியும். ஆனால் இந்தக் கணிப்புகள் எல்லாம் மிகவும் சிக்கலானவை.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் எம்மைப் பாதிக்கும் இயற்கை அழிவுகள் சூறாவளியும் பெருவெள்ளமுமே. இவற்றைப் பல நாட்கள் அல்லது பல மாதங்கள் முன்பாகவே அறிந்து கொள்ளச் சோதிடம் நிச்சயம் பயன்படும்.

### தாழமுக்கம்

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கங்கள் பல ஏற்படுவது வழமையானதுதான். இந்தத் தாழமுக்கங்களே எமது வரண்ட நிலப் பகுதிக்கு அதிக மழை வீழ்ச்சியைக் கொடுக்கின்றன. இந்தத் தாழமுக்கங்கள் சிறிதாக இருந்தால் சாதாரண மழையையும், பெரிதாக இருந்தால் அதிக மழை வீழ்ச்சியையும் பெருவெள்ளத்தையும் எதிர்பார்க்கலாம். இத் தாழமுக்கம் ஒன்று தீவிரமடைந்தால் அது சுழல்காற்றாக மாறிப் பெரும் சேதத்தை விளைவிக்கும். தாழமுக்கங்கள் எல்லாம் சூறாவளியாக மாறுவதில்லை. அமுக்க வேறுபாடு ஒரு குறிப்பிட்ட அளவு அதிகரித்தாலே சூறாவளி உருவாகும்.

சென்ற ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி காலை சென்னைக் கரையைக் கடந்த புயல் எதிர்பார்த்தது போன்றே உருவாகியது. அதைவிட மோசமான புயல் ஒன்று இந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி 26 ஆம் திகதிகளில் உருவாகக்கூடும்.

வரவிருக்கும் புயலைப் பற்றிய முன்னறிவித்தலையும் சோதிட விளக்கத்தையும் சென்ற 1-9-1994 [illegible] சம்பந்தர் [illegible] மாநாட்டில் வெளிப்படுத்தியிருந்தேன்.

### சூறாவளி பற்றி எதிர்வு கூறல்

23-11-1994 ஆம் திகதி வங்காள விரிகுடாவின் தென் மேற்குப் பகுதியில் மட்டக்களப்புக்குத் தென்கிழக்கே சுமார் 600 கிலோ மீற்றர் தொலைவில் தாழமுக்கம் ஒன்று உண்டாகும். இதனால் இலங்கையின் தென் கிழக்குக் கரையோரப் பகுதியில் அதிக மழையை எதிர்பார்க்கலாம்.

இம்மாதம் 24 ஆம் திகதி இத்தாழமுக்கம் மட்டக்களப்புக்குக் கிழக்கே சுமார் 300 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும். அன்று மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் அதிக மழை பெய்யக்கூடும். வட பகுதியில் பெரும்பாலும் வானம் தெளிவாக அல்லது குறைந்த முகில்களுடன் தென்படும்.

இம்மாதம் 25 ஆம் திகதி இத்தாழமுக்கம் தீவிரமடைந்து சூறாவளியாக மாறும். இச்சூறாவளியின் மையம் திருகோணமலைக்கு கிழக்கே சுமார் 200 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும். இதன் மையம் அல்லது கண் வடமேற்குத் திசையில், தமிழ் நாட்டின் கிழக்குக் கரையில் உள்ள நாகப்பட்டினத்தை நோக்கி நகரும். அன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அதிக மழை பெய்யும்.

இம்மாதம் 26ஆம் திகதி அல்லது 27 ஆம் திகதி இச் சூறாவளியின் மையம் ஆனையிறவுக்கும், தமிழ் நாட்டின் பாண்டிச்சேரிக்கும் இடையில் கரையைக் கடந்து நாட்டினுள் செல்லும். இவ்விரு நாட்களிலும் வடபகுதியிலும், தமிழ் நாட்டிலும், கடும் மழையும் பெருவெள்ளமும் பலமான காற்றும் இருக்கும். தமிழ் நாட்டின் கோடிக்கரை முதல் ஆந்திர பிரதேசத்தின் மச்சிலிப்பட்டினம் வரையுள்ள கிழக்குக் கரையோரப் பகுதிகளில் பெருமழை வெள்ளமும் புயல்காற்றும், கடல் கொந்தளிப்பும் ஏற்பட இடமுண்டு.

இச்சூறாவளியின் மையம் அல்லது கண் பெரும்பாலும் நாகபட்டினத்துக்கும் காரைக்காலுக்கருகில் உள்ள பூம்புகாருக்கும் இடையே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கலாம்.

இச் சூறாவளி பற்றி எவரும் பீதியடைய வேண்டியதில்லை. இது ஒரு நீண்ட கால எதிர்வு கூறலாகும். (Long Range Predication) இன்றைய வளிமண்டலவியலாளர்கள் நீண்ட கால எதிர்வு கூறலைச் செய்ய முடியாவிட்டாலும் குறுகிய காலத்துக்குரிய முன்னறிவித்தலை (Short Term Forecast) திறம்படச் செய்யக் கூடிய அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளனர்.

வானிலைச் செய்மதிகள் அனுப்பும் முகில்கள் பற்றிய படங்களையும், தொலை யுணர்வுத் தரவுகளையும் (Remote Semsing Data) பிற வழிகள் மூலம் பெற்றுக் கொண்ட வானிலை பற்றிய தகவல்களையும் கணணிகள் உதவியுடன் ஆராய்ந்து கூறுவதால் மூன்று நாட்களுக்குட்பட்ட குறுகிய காலத்துக்குரிய வானிலை முன்னறிவிப்புக்களை அவர்கள் மிகவும் சரியாகச் சொல்லக் கூடியதாக இருக்கும்,

இன்று வரை இச்சூறாவளி பற்றிய எந்த எதிர்வு கூறலையும் இலங்கை வளிமண்டல அவதான நிலையத்தினரோ, இந்திய வளிமண்டல அவதான நிலையத்தினரோ, அறிவிக்கவில்லை. இம்மாதம் 23ஆம் திகதி இரவுதான் அவர்களுக்கு இது பற்றித் தெரிய வரும். அதன்பின் அவர்களின் அறிவிப்புக்கள் சரியாக இருக்கும்.

அவர்கள் சூறாவளி உருவாகியிருப்பதாக அறிவிக்கும் வரை எவரும் பீதியடையத் தேவையில்லை. ஆனால் ஓரளவாவது எச்சரிக்கையாக இருக்கலாம்.

இலங்கைத் தீவுக்கருகில் தாழமுக்கங்கள் உண்டாகக் கூடிய நாட்களையும் இங்கு எதிர்வு கூறியுள்ளேன். இந் நாட்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அதிக மழையை எதிர்பார்க்கலாம். இத்தாழமுக்கங்கள் எல்லாம் சூறாவளியாக மாறமாட்டா. ஆனால் அதிக மழையைக் கொடுக்கக் கூடியன. இந்நாட்களில் சில இடங்களில் பெரு வெள்ளம் ஏற்படலாம்.

**சோ. சிவகடாட்சசர்மா**

### அதிக மழையை எதிர்பார்க்கக் கூடிய நாட்கள்

1994 நவம்பர் — 17, 18 (23 முதல் 27 வரை புயல் அபாயம் உண்டு.

1994 டிசம்பர் — 2, 3, 8, 9, 10, 16, 21, 23, 24, 29, 30, 31

1995 ஜனவரி — 5, 8, 9, 12, 14, 15, 20, 24, 27

1995 பெப்ரவரி — 1, 5, 8, 14, 15, 17, 20, 23, 27

1995 மார்ச் — 4, 6, 11, 13, 15, 16, 20, 22, 28, 31

1995 ஏப்ரல் — 3, 5, 7, 10, 12

### மழையில்லாத நாட்கள்

1994 நவம்பர் — 24, 28, 29

1994 டிசம்பர் — 1, 5, 6, 17, 20, 25, 28

1995 ஜனவரி — 2, 4, 16, 21, 22, 23, 28, 29, 31

1995 பெப்ரவரி — 7, 12, 18, 21, 24, 25, 27, 28

1995 மார்ச் — 2, 3, 5, 7, 12, 17, 24, 25, 26, 27, 30

1995 ஏப்ரல் — 4, 6, 8, 9, 13

(ஏனைய நாட்களில் சிற்சில இடங்களில் மழை பெய்யக் கூடும்)

### குளிர் அலை

17-12-1994 ஆம் திகதி வானம் தெளிவாக நீல நிறமாகத் தென்படும் அன்றிரவு பல இடங்களில் பனிக்குளிர் அதிகமாக இருக்கும். இலங்கையின் மலை நாட்டுப் பகுதியில் பனி வீழ்ச்சி அதிகமாக இருக்கும். வட கோளத்தில் உள்ள சில நாடுகளில் பனிவீழ்ச்சி மிக அதிகமாக இருப்பதுடன் குளிர் அலைத்தாக்கம் (Cold Wave) ஏற்படும். தென் கோளத்தில் உள்ள சில நாடுகளில் அன்று பகல் வெப்ப அலைத்தாக்கம் (Heat Wave) ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றங்களுக்கு ஏற்றவகையிலே எமதுமக்களும் முன்னேறவேண்டும்

## ஒளிப்பட, ஒலிப்பதிவு நாடா வெளியீட்டில் இளம்பரிதி

யாழ்ப்பாணம், நவ. 18

''உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் எமது மக்களும் பொருளியல், அறிவியல் துறைகளில் முன்னேற வேண்டியுள்ளது. இன்று இங்கு வெளியிடப்படும் வீடியோ படங்கள் மண்ணுடன் இணைந்த உயிர்ப்புள்ள அறிவியலை மக்கள் அறிய உதவும்''

இப்படிக் கூறினார் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.இ. இளம்பரிதி.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடந்த 'பிஞ்சுமனம்', 'எல்லைக் கற்கள்' வீடியோ ஒளிப்பட நாடாக்களினதும்—

'கடற்கரும் புலிகள்', 'கடலின் மடியில்' பாடல் ஒலிப்பதிவு நாடாக்களினதும்— வெளியீட்டு விழாவில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மன்னார் தொடர்பக பொறுப்பாளர் திரு.க. பத்மராஜனின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ் விழாவுக்கு விடுதலைப் புலிகளின் கலை,பண்பாட்டு கழக துணைப் பொறுப்பாளர் திரு. இ. ம. அன்பரசன் தலைமை வகித்தார்.

கலை, பண்பாட்டுக் கழக திரைப்படப் பிரிவு பொறுப்பாளர் திரு. பகலவன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. இளம்பரிதி பேசுகையில் மேலும் கூறியதாவது:-

''மக்களின் கலை ரசனைக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கும் வகையில் ஒலி, ஒளி நாடாக்கள் துரிதமாக வெளியிடப்பட்டு வருகின்றன.

வருடத்துக்கு ஒரு நாடா என்ற நிலையில் இருந்து பின்னர் மாதம் ஒரு நாடா என்று வெளிவந்தது. இன்று ஒரு நாளில் 4 நாடாக்கள் வெளியிடும் நிலைக்கு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

மக்களின் ரசனை வளர வளர ஆக்கங்களும் கூடுதலாக வருகின்றன.

மக்கள் தமது ஆதரவைக் கொடுக்க வேண்டும். இப்படி அவர் கூறினார்.

கலை, பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்துகையில் 'எமது போராட்டமாக இருந்தால் என்ன, பேச்சுவார்த்தையாக இருந்தால் என்ன விமர்சனங்கள் இருக்கக்கூடாது.

நாம் எதுவாயிருந்தாலும் மாவீரர்களின் தியாகத்துக்கு மதிப்பு கொடுத்து உறுதியாக நிற்கவேண்டும்' என்றார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மதிப்பீட்டுரை நிகழ்த்துகையில் '' இன்று வெளியாகும் 'எல்லைக் கற்கள்' படம் மன்னார் மக்களின் வாழ்க்கையைக் கொண்டு அந்த மக்களின் நடிப்பில் உருவாகியுள்ளது.

மரபு ரீதியாக இருந்துவந்த நடைமுறைகளை மாற்றி மண்வாசனையுள்ள படைப்பாக அது வந்துள்ளது' என்றார்.

ஒலி, ஒளி நாடாக்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்டு நிதர்சனப் பொறுப்பாளர் திரு. தமிழன்பனிடம் கையளித்தார்.

அதையடுத்து திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் ஒலி, ஒளி நாடாக்களை வெளியிட பங்குபற்றிய கலைஞர்களை கௌரவித்தார்.

'பிஞ்சுமனம்'படம தொடர்பான மதிப்பீட்டுரையை திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார்.

'எல்லைக் கற்கள்' பட இயக்குநர் திரு.ச. அன்ரனும் 'பிஞ்சுமனம்' பட இயக்குநர் திரு. ந. கேசவராஜனும் பதிலுரையாற்றினார்கள்.

(இ-3)

## தீவகக் கோட்டம்

யாழ்ப்பாணம், நவ. 18

தீவகக் கோட்டத்தைச் சேர்ந்த மாவீரர் குடும்பத்தினர் தமது தற்போதைய வசிப்பிட முகவரிகளைத் தீவகக் கோட்ட அரசியல்துறைச் செயலகத்திலோ அல்லது கோண்டாவில் யாழ். மாவட்ட மாவீரர் பணிமனையிலோ பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ)

# சான்றிதழ் பெற வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறியினை யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலையத்தில் பயின்று பகுதி I பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை மேற்படி நிலையத்தில் வைத்து வழங்கப்படும்.

சகல மாணவர்களையும் நிலையத்துக்கு வருகை தரும்படி கோரப்பட்டுள்ளது.

[இ-3]

## பிரேமா படுகொலை தொடர்பாக

# புதிதாக இரு நபர்கள் பற்றி பொலீஸார் விசாரணை

கொழும்பு, நவ. 18

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை தொடர்பாக இரு நபர்கள் குறித்து இரகசியப் பொலீஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என்று கொழும்பு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இரகசியப்பொலீஸ் தரப்பில் தெரிபட்ட சிரேஷ்ட பொலீஸ் அதிபர் அஸல தசநாயக்கா மேலதிக நீதிவான் சம்பா புதிபாலாவிடம் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்விவரம் வெளியிடப்பட்டது.

''நாம் நடத்திய விசாரணைகளில் இரு நபர்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன. முன்னர் நடத்தப்பட்ட விசாரணைகளில் வெளியாகாது இருந்தது.

இந்த நபர்களிடமிருந்து வாக்குமூலங்களை பதிவு செய்யும் நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்'' — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

''இதுவரை நடத்தப்பட்ட விசாரணை பற்றிய அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக சட்டமா அதிபரின் பதிலை எதிர்பார்த்துள்ளோம்'' என்று சிரேஷ்ட பொலீஸ் அதிபர் தெரிவித்தார்.

வழக்கு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஓ-எ)

## பூச்சிமருந்து விநியோகம்

வலிகாமம் தெற்கு, நவ. 18

இணுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நூற்றி அறுபது குடும்பங்களை சேர்ந்த சுமார் அறுநூறு பேருக்கு அண்மையில் யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகத்தினரால் இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தில் வைத்து சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியுடன் பூச்சி மருந்து வழங்கப்பட்டது. (ஐ-152)

## பாராட்டு

கொழும்பு, நவ. 18

இனவாதத்தை ஒழித்ததற்காக நான் புதிய ஜனாதிபதியைப் பாராட்டுகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் எனது தலைமையின் கீழ் இனவாதத்துக்கு இடமில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் பேசியபோது முன்கண்டவாறு தெரிவித்தார்.

# இந்திய உதவி இலங்கை நாடுகிறது

மேற்கு ஆசியத் துறைமுகம் ஒன்றில் இருந்து பத்துத்தொன் ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருள்களுடன் இலங்கையின் வடபகுதியை நோக்கி வந்துகொண்டிருப்பதாகக் கூறப்படும் கப்பலைக் கைப்பற்ற இலங்கை அரசு இந்தியாவின் உதவியை நாடி இருப்பதாக வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது

விடுதலைப் புலிகளுக்கு பெருமளவில் ஆயுதம் கப்பல் மூலம் வருவதாக கூறப்படும் செய்தி சமாதான முன்னெடுப்புக்களை குலைக்கக்கூடும் என்று கொழும்பில் இருந்து தமது செய்தியாளர் குறிப்பிடுவதாகவும் வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-3)

## சமாதான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளின் போதும் பயன் உள்ளதாகக் கருதும் எந்த உதவியையும் பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த உறுதிமொழியை இவ்வாரம் விஜயம் செய்த பிரிட்டிஷ் வெளிவிவகார பொதுநல பிரதி அமைச்சர் ரொனி போல்டி தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்த அவர் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் மற்றும் இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தினார். (இ-3)

# பயிலுநர் சபை பயிற்சி பெற்ற எழுதுவினைஞருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் தேசியபயிலுநர் சபை பயிலுநர் எழுதுவினைஞர்களை நிரந்தர சேவையில் சேர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இது தொடர்பாக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயிலுநர் எழுதுவினைஞர்களை நிரந்தர சேவையில் சேர்ப்பது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் கொள்கையளவில் இணக்கம் தெரிவிக்கப் பட்டுள்ளதாவும் —

எவ்வாறு அது நடைமுறைப் படுத்தப்படும் என்பது குறித்து முடிவுகள் எடுக்கப் படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கல்வித் திணைக்களத்தில் பணியாற்றுபவர்களை நிரந்தர சேவையில் அமர்த்த அத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் —

இதன்படி யாழ். கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் 45 பயிலுநர் எழுதுவினைஞர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும்— அறியவந்தது.

## வடக்கிலே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குலைந்து போயிருப்பதாக நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு போனபோது அங்கு ஒரு அமைதியும், கட்டுக்கோப்பும் இருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டேன் உண்மையாகவே அங்கு அரசியல் கட்டுக்கோப்பு இருப்பது தெரிய வந்தது.

''மக்களுக்கு அந்த அளவுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தியிருக்கிறது அந்த அமைப்பு. இந்தமாதிரியான அசாதாரண நிலையில் கூட முன்னேற்றத்துக்கான வழி எல்லாவற்றையும் அந்த அமைப்பு செய்து கொண்டிருக்கிறது என்பதை காணும் போது ஆச்சரியமாக இருந்தது.

கட்டுக்கோப்புக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இப்போதும் அதை நினைக்க வியப்பாக இருக்கிறது.

போர் காலத்தினால் இலக்கியம் அங்கு வளர்ந்துள்ளது. அசாதாரணமான நிலையில் கூட நல்லபக்குவத்தை அடைவார்கள் என்பதற்கு இலக்கிய வளர்ச்சி நிருபணம்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

# பாப்பரசரின் விஜயம் திட்டமிட்டபடி நடக்கும்

## ஜனவரியில் கொழும்பு வருவார்

கொழும்பு,நவ.18

பரிசுத்த பாப்பரசர் அடுத்த ஆண்டு ஜனவரியில் இலங்கைக்கு விஜயம் செய்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

உடல் நலக் குறைவு காரணமாக பாப்பரசர் தமது இலங்கை விஜயத்தைக்கைவிடலாம் என்று ஊகம் எழுப்பப்பட்டது.

எனினும்,பாப்பரசர் தாம் திட்டமிட்டபடி இலங்கை விஜயத்தை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருப்பதாக அவரின் இலங்கை விஜயத்தை ஒழுங்கு செய்யும் குழுவின் தலைவரான ஆயர் மலகம் ரஞ்சித் தெரிவித்திருக்கிறார்.

பாப்பரசர் வேறு நாடுகளுக்கு செல்லும் நிகழ்ச்சிகளைக் குறைக்கத்திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## பாப்பரசர் பயணம் செய்ய வத்திக்கானிலிருந்து கார்

கொழும்பு, நவ. 18

பரிசுத்த பாப்பரசர் கொழும்பில் தங்கியிருக்கும் இரு தினங்களும் அவர் பயன்படுத்துவதற்காக வத்திக்கானில் இருந்து திறந்த கார் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

பாப்பரசர் கட்டுநாயக்கா விமான நிலையத்ததை வந்தடைந்த பின்னர் அந்தக் காரையே பயன்படுத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## புலிகள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் அவர் தெரிவித்தார்.

தற்போது வடக்கு – கிழக்கில் திட்டமிடப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பிரிகேடியர் கெமுனு குலதுங்க செய்தியாளர்களிடம் சொன்னார்.

விடுதலைப் புலிகளின் ஒருவார கால போர் இடைநிறுத்தம் தொடர்பான அறிவிப்பு வெளியான பின்னர் ஸ்ரீலங்கா படையினர் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருவது தெரிந்ததே.

## யாழ்ப்பாணத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான இறுதிப் பேச்சுக்கள் யாழ். அரச அதிபருக்கும், அரசுக்கும் இடையில் நடைபெறுவதாகவும் அறியவந்தது.

யாழ். செயலகம், யாழ். ஆஸ்பத்திரி, மற்றும் தொலைத் தொடர்பு திணைக்களம் ஆகியவற்றில் இவை பொருத்தப்படும் என்றும் தகவல்கள் தெரிவித்தன. (அ-3

இப்பத்திரிகை ... விகிற்டெட்டின ...

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு நவரத்தினம்

(பத்திரிகை முகவர், திருநெல்வேலி)

கைதடியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியில் வசித்தவருமாகிய சிவகுரு நவரத்தினம் (உரிமையாளர், கனகா ரேடர்ஸ் திருநெல்வேலி சந்தி) நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் சிவகுரு – இராசம்மா அவர்களின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், வினோதன், வசந்தன், கம்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, சிவலிங்கராசா, சந்தானலஷ்சுமி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கரப்பிள்ளை, சின்னம்மாவின் அன்பு மருமகனும், கனகராசா, புஸ்பராசா, புஸ்பலீலா, யோகமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நேற்று (17– 11– 94) வியாழக்கிழமை பி. ப. 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊத்தலடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்து செல்லப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.
(சி/9696)

## திருமதி சீதேவிப்பிள்ளை பொன்னம்பலம் (செல்லாச்சி)

அளவெட்டி வடக்கு, வைத்தியர் வளவைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதேவிப்பிள்ளை பொன்னம்பலம் (16-11-94) அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், மலேசியா) அன்பு மனைவியும், பாலகிருஷ்ணன், சிவநேசன் (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), கணேஸ்வரன் (லண்டன்), குமரேசன் (லண்டன்), நாகேஸ்வரி (கொழும்பு), மனோகரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, பத்மினி, நாகேஸ்வரி, செல்வராணி, சச்சிதானந்தன், சியாமளா ஆகியோரின் அன்பு மாமியாரும், மாலா, ராஜ்கோபி (மாணவன் மானிப்பாய் இந்துக்கல்லூரி), கணேஷாயினி, கணேந்திரா (மாணவன் மகாஜனக் கல்லூரி), ஆரணி, திசானி, மயூரன், கரன், லிங்காயினி, அமிர்தினி, அரவிந்தன், அருட்குமரன், ராகவன், வாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 17 – 11 – 94 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பொ. சிவநேசன்
(மகன்)
ரோஸ் பிரான்ட்ரொபி கொம்பனி முன்பாக.
உடுவில் வீதி,
மானிப்பாய்.
(33806)

## திருமதி செல்வமலர் இராசையா

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி செல்வமலர் இராசையா 16.11.94 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அண்ணாமலை இராசையாவின் (நீட்லூட் எஸ்ரேற் அப்புத்தளை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு – சுந்தரம்பிள்ளை தம்பதிகளின் மகளும் கந்தையா (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் – கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய P. W. D. ஓவசியர், கொஸ்லாந்த), சிவபாதம் (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்) ஆகியோரின் சகோதரியும் வித்தியாசாகரம் (அவுஸ்திரேலியா), இந்திராணி, பத்மராணி, (பிரான்ஸ்), மனோகரன் (கனடா), மல்லிகா (இங்கிலாந்து), ஆகியோரின் தாயாரும், சிவசுப்பிரமணியம் [உரிமையாளர், முரளி ஸ்ரோர்ஸ் கொழும்பு], கிருபாலசிங்கம் [இங்கிலாந்து], ஸ்ரீஸ்கந்தராஜா [பிரான்ஸ்], சாந்தா, ஜெயந்தா ஆகியோரின் மாமியாரும் சின்னம்மா, மலர், மங்களஇராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.11.94 அன்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
மு. சிவநாதம்
[சகோதரன்]
சித்தன்கேணி. [33808]

## சிவகுரு சுப்பிரமணியம்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், பசறை மணியம் ஸ்ரோர்ஸ் சுந்தரம்ஸ் உரிமையாளருமாகிய சிவகுரு சுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்.

இவர் சிவகுரு – மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் பரமசுந்தரம், கனகசுந்தரம் ஆகியோரின் அன்புத் தந்தையும் மீனகுமாரியின் அன்பு மாமனாரும், கந்தையா [மதவாச்சி], காலஞ்சென்ற இராசதுரை, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஈமக் கிரியைகள் கொழும்பில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
திருமதி. கந்தையா
[மைத்துனி]
சம்பிரதப்பிள்ளையார் வீதி,
ஆனைக்கோட்டை.
[33811]

## திருமதி நாகலிங்கம் தங்கம்மா (தங்கக்கா)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் தங்கம்மா (தங்கக்கா) 14-11-94 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி செல்லத்துரை சட்டம்பியாரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற செல்லையா நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சாந்தியின் (கனடா) அன்புத் தாயாரும், சிவானந்தனின் (கனடா) அன்பு மாமியாரும், கார்த்திக், அமலன், அமரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கா. விஸ்வலிங்கத்தின் (இளைப்பாறிய இலங்கை நிர்வாக சேவை பொலிஸ் திணைக்களம்) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-11-94 அன்று கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
DR V. ஞானாநந்தன்
(மருமகன்)
18/1,பாமன்கடை லேன்,
கொழும்பு 6
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(33809)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை சண்முகநாதன்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமரான ஐயாத்துரை சண்முகநாதன் நேற்றுக் காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும், சபேஜினி, சபேசன், அகிலன் [கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்] ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பரமேஸ்வரன்
[மைத்துனர்,]
[நல்லூர்,ப. நோ. கூ, சங்கம்]
காளிகோயிலடி,
கோண்டாவில்.
[33812]

## சரவணை சின்னத்தம்பி

அச்சுவேலி வடக்கை சேர்ந்த சரவணை சின்னத்தம்பி அவர்கள் (17-11-94) வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற றாணி அம்மாவின் அன்புக் கணவரும், மங்களேஸ்வரி, பரமேஸ்வரி, அழகேஸ்வரி, பவளேஸ்வரி, விக்கிரமசிங்கம் (அபுதாபி), சிவசுப்பிரமணியம் (முன்னாள் சர்வோதய ஊழியர்), பாலசுந்தரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இராசையா, தங்கராசா (இலங்கை வங்கி யாழ்.), குணம் (ஆசிரியர், வட்டு. இந்துக் கல்லூரி), ருக்மணி, மல்லிகாதேவி (ஆசிரியைவைத்தீஸ்வர கல்லூரி), உமாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், விஜயமோகனராஜ் (கணக்குப் பதிவாளர்), பிறேம்ராஜ் (ஜேர்மனி), சுஜபதிராஜ் (அபுதாபி), சுரேந்திரராஜ் (சுவிஸ்), றஜன்ராஜ்,ஜெயந்திராஜ்,றகுணராஜ்,சுலக்சன்,றமிசா, ராஜ்பிரசாந், ஜெகனா, பிரசன்னா, நிவேதனா, சுகிந்தா, விஜிதா, சிந்துஜன், கிருசாந் (ஜேர்மனி), கீர்த்திகா (ஜேர்மனி), ஜமுனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-11-94) பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக்கிரியை செய்யப்படும்.

இத்தகவலை நண்பர்களையும், உறவினர்களையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
சி. சிவசுப்பிரமணியம்
(மகன்)
முன்னாள் சர்வோதய ஊழியர்
(33813)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org